SWATHANTRA SANGU

Regd. No. M. 28

சுதந்திரச்சங்கு

வாரப் பதிப்பு

ஜான் புல்
ஜம்பம்
(படத்தான்)

சுண்டல் கூடை

எருமைக்கு ரிக்ஷா

கிண்டி மனிதப் பந்தயர் (படங்கள்)

காந்திஜி பல்லிழந்த கதை

டிராம் வண்டிக்காரன்
(மஞ்சேரி ஈசுவரன்)

பால ஸரஸ்வதி
(ஹம்ஸம்)

டோலெட்

புத்தகம் 4. மார்கழி 1 (15-12-33) வெள்ளி இதழ் 4

நமது மார்கழி நோன்பு

(சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்.)

[இது மார்கழி மாதம். ஹிந்துக்கள் அனைவரும் அதி காலையில் துயில்விட்டெழுந்து, மங்கள நீராடி, தூய்மையுடன் திருப்பாவையும், திருப்பள்ளி யெழுச்சியும் பாடி நோன்பிருக்கும் மாதம். "மாதங்களில் மார்கழி"யே மேலானதல்லவா? ஆகவே இக்கட்டுரையில் ஸ்ரீமான் ஆச்சாரியார் காட்டும் நோன்பை நாம் மேற்கொள்வோம். சில வருஷங்களுக்கு முன் தமிழ் நாடு சர்க்கா சங்கத்தார் கதராபிவிருத்தியை உத்தேசித்து வெளியிட்டு வந்த "குடிநூல்" என்னும் பத்திரிகைக்காக ஆச்சாரியார் இக்கட்டுரையை எழுதினர்.]

"கீழ்வானம் வெள்ளென் றெருமை சிறுவீடு
மேய்வான் பரந்தனகாண்! மிக்குள்ள பிள்ளைகளும்
போவான் போகின்றாரைப் போகாமற் காத்துன்னைக்
கூவுவான் வந்து நின்றோம் கோதுகலமுடைய
பாவா யெழுந்திராய்!"

*   *   *

"மாமன்மகளே மணிக்கதவம் தாள்திறவாய்!
மாமீர் அவளை யெழுப்பீரோ! உன் மகள் தான்
ஊமையோ? அன்றிச் செவிடோ? அனந்தலோ?
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ?"

எங்கள் நோன்பு இராட்டை நோன்பு.

"வையத்து வாழ்வீர்காள்! நாமும் நம்பாவைக்கு
செய்யும் கிரிசைகள் கேளீரோ! பாற்கடலுள்
பையத் துயின்ற பரமனடி பாடி
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி
மையிட் டெழுதோ மலரிட்டு நாம் முடியோம்
செய்யாதன செய்யோம் தீக்குறளைச் சென்றோதோம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமாறெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய்."

*   *   *

எங்கள் இராட்டை நோன்பு நிறைவேறினால்,

"தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரிபெய்து
ஓங்குபெருஞ் செந்நெலூடு கயலுகள
பூங்குவளைப் போதில் பொறிவண்டுகண் படுப்ப
தேங்காதே புக்கிருந்த சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய்."

வாழ்க! எங்கள் இராட்டை வாழ்க!

"தீயில் பொலிகின்ற செஞ்சுடராழி திகழ்திருச்
[சக்கரத்தின்
கோயில் பொறியாலே யொத்துண்டு நின்று குடிகுடி
[யாட் செய்கின்றோம்
மாயப் பொருபடை வாணனை ஆயிரந்தோளும்
[பொழிகுருதி
பாயச் சுழற்றிய வாழி வல்லானுக்குப் பல்லாண்டு
[கூறுதுமே!"

"என்ன இவர்கள் சும்மா சொன்னதையே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்—சுயராஜ்யம் வந்தபாடு ஒன்றும் காணோம்!"

"நீ சொல்வது வேடிக்கையாயிருக்கிறது. அவர்கள் சொன்னதைச் செய்தாலல்லவோ சுயராஜ்யம் வரும். கேட்ட விலையைக் கொடுத்தாலல்லவோ கைக்குச் சரக்கு வரும்."

"ஆமாம்! சுயராஜ்யத்திற்கு என்ன விலை கேட்கிறார்கள்? சொல்லுங்கள் பார்க்கலாம்."

"விலையைத்தான் காந்தி விளக்கமாய்ப் போட்டிருக்கிறாரே! கதரை விருத்தி செய்தால் சுயராஜ்யம் கிடைக்கும்."

"சுயராஜ்யம் என்னவென்று தெரிந்துகொள்ளாமல் குழந்தைகள்போல் நாம் கூப்பாடு போடுகிறோம். சுயராஜ்யம் ஒரு மிட்டாய்க் கட்டியன்று. அது ஒரு பசுவைப் போன்றது. பசு வாங்கின பிறகு அதைக் காப்பாற்ற வேண்டும். அதற்காக உழைத்துத் தீனி சம்பாதித்துப் போடவேண்டும். நாம் சாப்பிடுவதில் ஒரு பங்கு அதற்கு எடுத்து வைக்க வேண்டும். இரவில் திருடன் வந்து அதைக் கொண்டு போகாமல் காவலிருக்க வேண்டும். மிரண்டும் துள்ளியும், ஜனங்கள் மேல் பாயாமல் சாதுவாய்ப் பழக்கவும் வேண்டும். இதை யெல்லாம் கவனித்துக் காப்பாற்றத் தயாராயிருந்தால்தான் பசுவை வாங்கிக் கொள்ளலாம். இல்லாவிடில் விலைக்குப் பால் வாங்கிக் கொண்டு நல்ல பாலோ, அழுக்குத் தண்ணீர் கலந்ததோ கண்ணை மூடிக் கொண்டு குடித்து வருவது தான் நலம்...................... பொறுப்பும் பிரயாசையும் இல்லாத போனால் சுயராஜ்யம் கிடையாது."

"சுயராஜ்யம் என்றால் சர்க்கரைக் கட்டி என்று நினைத்தேன். நீர் சொல்லுவது இப்பொழுதுதான் எனக்கு விளங்குகிறது. சுயராஜ்யம் வந்தால் பெருங் கஷ்டமாய் முடியும் போலிருக்கிறது."

"ஆமாம். ஆனால் மானமாய்ப் பிழைக்க வேண்டுமானால், மாடும், மனைவியும், வீடும் இருக்க வேண்டுமல்லவா?"

"உண்மை. மாடு வைத்துக் கொள்ளுவது கஷ்டம். மனைவியைக் காப்பாற்றுவதும் கஷ்டம். குடும்பமென்றால் ஒய்வில்லாத பாடுதான். அதைப் போலவே சுயராஜ்யம் என்றாலும் ஒய்வில்லாத ஓர் புதிய சம்சாரம் தான். நீர் சொல்லுவது விளங்கிவிட்டது."

"ஸம்சார கஷ்டங்களைக் கண்டு பயந்து மனைவி வேண்டாம் என்று யார் சொல்லுவார்கள்? மாடு வேண்டாம், மனைவி வேண்டாம் என்று சொல்லுபவன் நாடோடி. சுயராஜ்யம் வேண்டாம் என்று சொல்லுகிறவன் மானமற்ற அடிமை. மானமாய்ப் பிழைக்கவேண்டுமானால் பாரம் சுமந்துதான் தீர வேண்டும்."

சுதந்திரச்சங்கு

" சங்கு கோண்டே வேற்றி யூதுவோமே—இதைத்
தரணிக்கேல்லா மேடேத்தோதுவோமே "

போன் நே. 8088 ஆசிரியர் ; சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

Vol. IV.] மார்கழி மீ 1உ வெள்ளிக்கிழமை (15—12—1933) [No. 4

ஜான்புல்லின் ஜம்பம்

அயர்லாந்து மிகமிகச் சிறிய தேசம். ஆனால், அது அவ்வப்போது மூட்டுப் பூச்சி மாதிரி பிரிட்டிஷ் சர்க்காரைக் கடித்துக் கொண்டேயிருக்கிறது. அயர்லாந்துக்குத் தலைவனாக வீரன் டிவாலரா தேர்ந்தெடுக்கப்பட்ட தினத்திலிருந்து, பிரிட்டிஷார் திகைப்படையும் வண்ணம், ஒன்றின் பின்னொன்றாக, அவன் பல தொல்லைகள் விளைவித்துக் கொண்டேயிருக்கிறான். பிரிட்டிஷார் தங்களிடம் வாங்கிவந்த நிலக் கந்தாயத்தைச் செலுத்த முடியாது என்று ஒரு சட்டத்தைத் தயாரித்தான். பிறகு, ராஜ விசுவாசப் பிரமாணம் செய்ய முடியாது என்று ஒரு சட்டம் கொண்டு வந்தான். ஒவ்வொரு தடவையும் பிரிட்டிஷ் துரைத்தனம் என்னென்னமோ 'பூச்சி' காட்டிற்று. அவன் ஒன்றையும் இலட்சியம் செய்யாமல் தன் காரியத்தைத் தன்னிஷ்டப்படி நடத்திக்கொண்டே போனான்.

அயர்லாந்திலிருந்து வரும் சாமானுக்குப் பிரிட்டிஷ் சர்க்கார் பலமாக வரிகள் விதித்தது. பிரிட்டனிலிருந்து தங்கள் நாட்டுக்கு வரும் சாமான்களுக்கு, டிவாலராவைத் தலைமை கொண்ட அயர்லாந்து அரசாங்கமும் வரிகள் போட்டது. இந்தப் பொருளாதாரப் போராட்டம் இன்னும் முடியவில்லை.

" நாங்கள் எங்கள் தேசத்தில் குடியரசு ஸ்தாபிக்க விரும்புகிறோம் ; அப்படிச் செய்தால் நீங்கள் என்ன செய்ய உத்தேசம் ?" என்று டிவாலரா பிரிட்டிஷ் சர்க்காருக்குச் சமீபத்தில் ஒரு கடிதம் எழுதினான். இந்த எக்கச்செக்கமான கடிதத்திற்கு ஜம்பம் மிகுந்த ஜான்புல் என்ன பதில் சொல்லுவது ? அயர்லாந்தில் குடியரசு ஸ்தாபிதமாவதென்றால், ஏகாதிபத்தியத்தினின்று பிரிவது என்று தானே அர்த்தம்? அயர்லாந்தோடு போருக்குப் புறப்படுவதா அல்லது அது பிரிந்து போனால் போகட்டுமென்று விட்டு விடுவதா? அயர்லாந்து பிரிந்தால், மற்றக் குடியேற்ற நாடுகளும் அதைப் பின்பற்றி விடுமானால், என்ன செய்வது ? பிரியக்கூடாதென்றால், மற்ற எல்லாக் குடியேற்ற நாடுகளுக்குமே கோபம் வந்துவிடக் கூடும். இப்படித் திக்கு முக்காடும்படிச் செய்த டிவாலராவின் கடிதத்திற்கு ஜான் புல் பூசிமெழுகுவதைத் தவிர, வேறு வழியுண்டா ?

ஆகவே, ஜே. எச். தாமஸ் என்ற பிரிட்டிஷ் மந்திரி வெகு ஜாக்கிரதையாகப் பதில் சொல்ல வேண்டியதாயிற்று. " நம்ம டிவாலரா என்ன இப்படிச் சொல்லுகிறார் ? அயர்லாந்துக்கும் இங்கிலாந்துக்கும் உள்ள உறவு டிவாலரா சொல்லுவது போன்றதல்ல. சமரசமாகி விடலாம். கதவைத் திறந்தே வைத்திருக்கிறோம் " என்பதாக, வெகு நாஜூக்காய், தித்திக்கும் வார்த்தைகளால் கூறினார் பிரிட்டிஷ் மந்திரி. நேரானபதில் கிடையாது.

இந்த மழுப்புதலைக் கேட்ட டிவாலரா "பிரிட்டிஷ் சர்க்கார் சரியான பதில் சொல்லாமல் பூசி விட்டது. அயர்லாந்து ஜனங்கள் பிறர் கட்டளைக்கு உட்பட இசையமாட்டார்கள் ; அவர்கள் அடிமைகளாயிருக்கப்போவதில்லை. இதை பிரிட்டிஷ் அரசாங்கம் நன்கு அறிந்துகொள்ளட்டும் " என்று அழுத்தந் திருத்தமாகச் சொல்லியிருக்கிறான். டிவாலரா வாய்ப் பேச்சுக்காரனல்ல. அவன் செயல் வீரன் ! ஜான் புல்லின் ஜம்பம் இனி என்ன ஆகப் போகிறதெனப் பார்ப்போம்.



—Courtesy : ஹி. டைம்ஸ்.

வெளியே கிளம்பும் அயர்லாந்தை, "கதவு திறந்திருக்கிறது, வா, என் தங்கமே" என்று பிரிட்டிஷ் மந்திரிகள் கொஞ்சிக் கூப்பிடுகிறார்கள். பலிக்குமா ?

அர்த்தம் என்ன ?

அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியைப் பற்றி இந்தியச் சட்டசபையில் கேள்விகள் பிறந்தன. சர்க்கார் பதிலின் சுருக்கமாவது: “(1) அ. இ. கா. கமிட்டி சட்ட விரோதமானதென நாங்கள் அறிக்கை செய்யவில்லை; ஆனாலும், அதை மாத்திரம் வேறு கமிட்டிகளிடமிருந்து ஏன் வித்தியாசப் படுத்தவேண்டும் என்பதற்கு எங்களுக்குக் காரணம் தெரியவில்லை ; (2) காங்கிரஸ் தனது முறையை மாற்றிக் கொள்ள விரும்பினால், அதற்கு அ. இ. கா. கமிட்டி கூட வேண்டியதில்லை ; கூடாமலே மாற்றிக் கொள்ளலாம்”—இதுதான் சர்க்கார் பதில். இதிலிருந்து என்ன தொனிக்கிறது ? காங்கிரஸ் தலைவர்கள் தனித் தனியே பிரிந்து தங்களிடம் சரணுதி அடைய வேண்டும் என்பதே சர்க்கார் விருப்பம் என்று புலப்படுகிறதல்லவா ? காங்கிரஸ் சிதைவுற்றுச் செல்வாக்கிழக்கவேண்டு மென்பதே அவர்கள் ஆசையெனத் தொனிக்கிற தல்லவா ? சமரசத்தில் சர்க்காருக்கு விருப்பமானல், இப்படியா பதில் சொல்லும் ? காங்கிரஸ் தலைவர்கள் இதைப் பற்றி இலட்சியம் செய்யமாட்டார்கள் என்பது உண்மைதான். ஆனல், சர்க்கார் மனோபாவத்தைக் காட்டவே இதைக் குறிப்பிட்டோம்.

“பக்தி பண்ணிக் கொண்டிருந்தால்”

நமது பாகவதர்களெல்லாம் பாடவில்லையா ? “பக்திபண்ணிக் கொண்டிருந்தால், முக்தி பெறலாமே ;” ஆஹா ! அதில் என்ன தடையிருக்கிறதென்று கேட்கிறோம். முக்தி வேண்டுமானல், ஈசுவரனிடம் பக்திபண்ண வேண்டும் ; மூலபாங்கி இந்திய மயமாக வேண்டுமானல், ஷுஸ்டரிடம் பக்தி பண்ணவேண்டும். மூலபாங்கி விவாதம் இன்னும் சட்டசபையில் நடந்து கொண்டிருக்கிறது. நாணயமாற்று, கவர்னர் ஜெனரல் அதிகாரம் முதலிய பல முக்கிய விஷயங்களிலும் சர்க்கார் பக்கமே கெலிப்பு. இல்லா விட்டால் தானென்ன ? இந்தியச் சட்டசபை ‘விளையாட்டுப் பிள்ளை’த்தனமாகச் செய்யும் முடிவுகள் இந்தியா மந்திரியைக் கட்டுப்படுத்துமா, என்ன. அது கிடக்கட்டும். மூலபாங்கியில் இந்தியர்களை அதிகமாக உயர் பதவிகளில் நியமிக்க சர்க்காருக்கு இஷ்டமுண்டோ என்பதில் சந்தேகமாக ஒருவர் என்னவோ உளறிவிட்டாராம் ! ஷுஸ்டருக்கு வெகு கோபம் உண்டாகிவிட்டது. தங்களை நம்பவேண்டுமென்பதற்கு ஆத்திரத்துடன் இரண்டொரு உதாரணங்கள் சொன்னராம். சட்டசபை ராஜீய வாதியாரே, அன்று பஜனை மடத்தில் பாடிய பாகவதர் பாட்டை மறவாதிரும், ஐயா ! வரம் பெறலாம்.

அபத்தக் களஞ்சியம் !

சர்க்காரின் “1931—32 இந்தியா” என்ற புத்தகம் வெளிவந்திருக்கிறது. இது ஒரு வருடாந்திரச் சடங்கு. தேசத்தின் ராஜீய, பொருளாதார நிலைமைகளை இதன் ஆசிரியர் சர்க்கார் கண்ணுடியைப் போட்டுக் கொண்டே பார்ப்பது வழக்கமாய்ப்போய்விட்டது. இதில் பல அபத்தங்கள் காணப்படுகின்றன.

‘சைமன் கமிட்டி அறிக்கையைப் போலவே வட்ட மேஜை அறிக்கைகளையும் இந்திய தேசீயப் பத்திரிகைகள் கண்டித் துரைத்தன’ என்று இவ்வறிக்கை கூறுகிறது. வாஸ்தவந்தான். ஆனல், தேசீயப் பத்திரிகைகளை அது ‘நைஸா’கத் தூறு கூறியிருப்பதுதான் விஷமத்தனமாகும். தேசீயப் பத்திரிகைகள் ஆராயாமல் இயந்திரம் போல் எழுதுவது சகஜம் என்று இவ்வறிக்கை கூறுவது துடுக்குத்தனமல்லவா ? இது காந்தி—இர்வின் ஒப்பந்தத்தை முறித்தது காங்கிரஸே என்று கூறுவதையும், வட்டமேஜை மகாநாட்டில் காங்கிரஸ் கலந்துகொண்டதால் ஒரு பயனும் ஏற்படவில்லை என்று குறிப்பிடுவதையும், சர்க்கார் வக்காலத்துப் பேச்சு என்று ஒதுக்க வேண்டியதுதானே. காங்கிரஸை அடக்குவதற்காக, சர்க்கா[illegible] கொண்ட அடக்குமுறை ஆட[illegible] இது ஆதரிக்கிறது. இந்த சர்க்க[illegible] போராட்டம், அவர்களுடைய சொந்தப் போராட்டம் மாத்திர மல்லவாம் ! வருங்கால சர்க்காருக்கெல்லாம் வக்காலத்து வாங்கிக் கொண்டே இதை நடத்தினர்களாம் ! அடடா ! திரிகால ஞானி சர்க்காரே !

ஹரிஜன இயக்க விஷயத்தைப் பிரஸ்தாபிக்கையிலும், இவ்வறிக்கை சிறிது கயிறு திரிக்காமலில்லை. காந்திஜீயின் உபவாசத்தால் ஏற்பட்ட தாராள எண்ணம் கிராமங்களில் பரவவில்லையாம். இருக்கலாம். ஆனல், ஹரிஜனங்களின் குறைகள் தீர்வதற்கு அநேக வருஷங்கள் செல்லுமென்று சூசனையாய்ச் சொல்லுகிறர் இவ்வறிக்கையைத் தயாரித்த பேர்வழி. இதென்ன சோதிடமா, சாபமா ? சாபமிடுவதற்கு இந்தப் பேர்வழி யார் ? அபத்தப் பஞ்சாங்கத்தில் அறுபது நாழியும் தியாச்சியம். இந்த அபத்த அறிக்கையை வெளியிட எதற்காக, ஏழை மக்களின் பணத்தை வாரியிறைக்க வேண்டும் என்பதுதான் நமக்கு விளங்கவில்லை.

8 மணி நேரத்தில் அரை லட்சம் வேட்டு

வைஸிராய் வில்லிங்டன் பிரபு பவனி கிளம்பி யிருக்கிற ரல்லவா ? இவரைப் புதுக்கோட்டையில் வரவேற்க நடந்த ஏற்பாடுகளைப் பற்றிய விவரங்கள் வெளியா யிருக்கின்றன. வைஸிராய் எட்டு மணி நேரம் தங்குவதற்கு அரை லட்ச ரூபாயை வேட்டுவிடுவதென்றல், ஆச்சரியமாகத் தானிருக்கிறது. ஜனங்கள் ‘பஞ்சமோ பஞ்சம்’ என்று கதறிக் கொண்டிருக்கையில் ஒரு சமஸ்தானம் இப்படிப் பணத்தைக் கொட்டி யிறைக்கலாமா ? மைசூர் சமஸ்தானம், திருவாங்கூர் சமஸ்தானம் முதலியவற்றிலெல்லாம் வைசிராய் விஜயத்தால் எவ்வளவு பணம் செலவழிந்ததோ ? இதே ‘ரேட்’டில் செலவு நடந்திருக்குமானல், யாரும் வருந்தாமலிருக்கமுடியாது. வைசிராய் பத்து சமஸ்தானத்தில் காலடி வைத்துத் திரும்பினரானல், 5 லட்ச ரூபாய் ‘அவுட்’ என்ற பேரை வைசிராய்க்கு வாங்கிக் கொடுப்பது நல்லதல்ல என்றே நமக்குத் தோன்றுகிறது.

திருப்பிப்போடு ஆமையை

தெருவிலே போன ஒரு சாமியார் சில சிறுவர் ஒரு ஆமையை அடித்துக் கொண்டிருக்கக் கண்டார். "மல்லாக் கப்போட்டு அடித்தாலல்லவா, சாகும். அதை நாம் சொல்லலாமோ? கிருஷ்ண, கிருஷ்ணா!" என்று இரைந்து சொல்லிவிட்டு, காதை மூடிச் சென்றார். சாமியார் யோசனைப்படி இரண்டு விநாடியில் கூர்மம் ஆண்டவன் திருவடிகளை அடைந்துவிட்டது என்று கதை சொல்லுவார்கள. பர்மா இந்தியாவிலிருந்து பிரிவதற்கு வேண்டிய சகல ஜாலங்களையும் செய்தது பிரிட்டிஷ் சர்க்காரே யென்பது எங்கும் பரவியிருக்கும் அபிப்பிராயம். அதை மாற்ற சர் ஹோர் என்னவோ பசப்பிப் பேசி யிருக்கிறார். பர்மாப் பிரதிநிதிகள் இப்பொழுது லண்டன் கூட்டுக் கமிட்டி முன சென்றிருக்கிறாகள். ஹோர் அவர்களிடம பேசினார். பர்மா பிரிய வேண்டுமா, இல்லையா என்பது குறித்து அவருக் கொன்றும் ஆசை கிடையாதாம். பிரிந்தால், செல்வம, வியாபாரம் முதலியவற்றில் பர்மா கொழுத்து விடுமாம்; பிரியாவிட்டால், பின்னால் ராஜ்யத் துறையில் உயர்ந்த அபிவிருத்தியோடு கூடிய சீர்திருத்தம் கிடைக்குமென்று எண்ணிக் கொண்டிருக்கலாமாம. ஆனால், அது நடவாத காரியமாம். யாதொரு பாரபட்சமுமின்றிப் பேசுவதாய் அவர் அபிநயம் செய்தாலும், பிரிவினையே நல்லது என்றுதான் அவர் பேச்சுக்கு அர்த்தம். அது ஒளி மறைவாய்க் கூடவில்லை; ஸ்பஷ்டமாக விளங்குகிறது. இது என்ன நியாயமோ தெரியவில்லை.

இரண்டு பிரயாணிகள்

Courtesy, ஹி. டைம்ஸ்

ஓர் புறத்தில் முடி மன்னர்கள் புகழ் பாட வைஸ்ராய் பவனி சென்று கொண்டிருக்கிறார். புதிய அரசியலில் சுதேச மன்னர்களுக்குச் சவுகர்யங்களேற்படுத்த முயல்வதாக ஆங்காங்கு சொல்லிக்கொண்டே போகின்றார். அவரது பிரயாணம் முடிவடைந்த பிறகு அவர் சொந்த நாட்டிற்குப் போவாராம். இந்த நாட்டை ஆளுகின்ற ஜாதியைச் சேர்ந்தவ ரல்லவா அவர்?

இன்னொரு புறத்தில் முழத்துண்டு அணிந்த முனிவர் 'ஹரிஜன முன்னேற்றம்' என்ற கொடியைத் தாங்கி ஊரூராய்ச் சென்றுகொண்டிருக்கிறார். லக்ஷக்கணக்கான மக்கள் அவரது திருவுருவைத் தரிசிக்க வருகின்றார்கள். இந்தப் பிரயாணம் அவரது. வாழ்வில் வெகு உத்தமமான காலம். ஹரிஜன சேவைக்கான இந்தப் பிரயாணம் அடுத்த ஆகஸ்டு மாதத்தோடு முடிவடையும். பிறகு ஐயன் எங்கிருப்பாரோ? என்ன செய்வாரோ? அடிமை நாட்டில் பிறந்தவரன்றோ அவர்?

BOOKS by MAHATMA GANDHI

(in English)

	Rs.	A
Satyagraha in South Africa ...	4	8
Young India Vol. I ...	4	0
Young India Vol. II ...	4	0
A Guide to Health ...	0	12
Neethi Dharma ...	0	8
Indian Home Rule ...	0	8

Swathanthra Sangu Book Depot

8-c, Pycrofts Road,

Triplicane, Madras.

பிரோஷ் காந்தி கைதி

அலஹாபாதுக் காங்கிரஸ் ஊழியரான பிரோஷ் காந்தியும் இன்னொருவரும் கைது செய்யப்பட்டிருக்கிறாகள்.

தேசாய்க்கு இரண்டு வருஷம்

24 மணி நேரத்தில் அஹமதாபாதை விட்டு வெளியேறாததற்காக, ஸ்ரீஜத் மொரார்ஜீ தேசாய்க்கு இரண்டு வருடக் கடினகாவல் கிடைத்துள்ளது.

கடல் தாண்டிய இந்திய விமானி

தமது சொந்த ஆகாய விமானத்தில் கல்கத்தாவிலிருந்து ரங்கூனுக்கு, சென்ற வாரம் ஸ்ரீமான் ஆவுடையப்ப செட்டியார் பறந்து சென்றார். கடலைத் தாண்டிய முதல் இந்திய விமானி இவர்தான்.

கோயில் திறப்பு

மசூலிப் பட்டணத்தில் சமீபத்தில் இரண்டு கோயில்கள் ஹரி ஜனங்களுக்குத் திறந்துவிடப் பட்டன.

பம்பாய் காங்கிரஸ் கமிட்டி பொக்கிஷதாரியா யிருந்த நண்பர் R. கிருஷ்ணையர் இப்போது பெங்களூரில் தங்கி யிருக்கிறார். சாந்த குணம் மிகுந்த அவரை அதிகாரிகள் கைது செய்ததோடு நில்லாமல் ஆயிரம் ரூபாய் ஜாமீனும் கட்டும்படி செய்து விட்டார்கள். போலீசார் போக்கே தனிப் போக்கு அல்லவா?

திப்புவின் சுண்டல் கூடை

[பல விடங்களிலிருந்து சேர்த்த கடலை, காராமணி, மொச்சைக் கொட்டை, கொள்ளு எல்லாவற்றையும் வேக வைத்துப் பிரசாதமாய்த் தரலாமென்று நினைக்கின்றேன். பிரசாதம் வருகுது, பிடியுங்கள் கையை!]

பூனைக்காக எலி வளர்த்தல்

வீட்டிலுள்ள பூனைக்கு ஆகாரம் வேண்டுமே யென்று பரிதாபப்பட்டு ஒரு F-அக்கீர் தன் வீட்டில் எலிகளை வளர்க்க ஆரம்பித்தானாம். அந்த மாதிரி இருக்கிறது சர்க்கார் போக்கும்! சர்க்காரின் சிக்கனச் செலவை ஆராய்ச்சி செய்ய, பெருஞ்செலவில் ஒரு சிக்கன ஆராய்ச்சிக் கமிட்டியை வைக்கப் போகின்றார்களாம். இது தரப்போகின்ற பிரசாதம் எப்படியிருக்குமோ?

அஜீர்ண நாள்

'அதிக வரி நாள்' என்று ஓர் தினத்தை மிராசுதார்கள் அநுஷ்டித்தார்களில்லையா. அதே மாதிரி 'இனாம் தார் நாள்' என்று ஓர் தினத்தை இனாம்தார்கள் நடத்த வேண்டுமென ஒருவர் சொல்கிறார். 'அஜீரண நாள்' என்று ஓர் தினத்தை, கொழுத்த சம்பளக்காரர் அனுஷ்டித்தால் நன்றாயிருக்குமென்று தோன்றுகிறது.

குப்பைக் கூடையை நிரப்ப

இவர்களை யார் கேட்டார்கள்? ஸர் தேஜ் பகதூர் சப்ரூ 175 பக்கங்களையுடைய ஓர் யாதாஸ்தைத் தயாரித்துக் கூட்டுக் கமிட்டிக்குச் சமர்ப்பித்திருக்கிறார். அவருக்குப் பக்க பலமாக ஜயக்கர், ரங்கஸ்வாமி அய்யங்கார் இவர்களும் சில புத்தகங்களை பிரிட்டிஷ் பாதார விந்தத்தில் சமர்ப்பித்துக் கொண்டிருக்கிறார்களாம். இவர்களுக்குப் புத்தகம் எழுதுவதைத் தவிர வேறு வேலையில்லையா என்ன? தான் நினைத்த வழியே போவதென்று ஜான் புல் தீர்மானித்து விட்டான். சாப்ரூ கோஷ்டியின் புத்தகங்க ளெல்லாம் குப்பைக் கூடையையே அடையப் போகின்றன. ஏன் புத்தகங்களை எழுதி எழுதி அனுப்புகிறார்களோ தெரியவில்லை. குப்பைக் கூடையை நிரப்புவதற்கா?

குந்து ராஜா குந்து!

"ராஜா வந்துச்சே! மந்திரி வேசம் தானும் வந்திச்சே—ரீ—ரீ—ரீ. அகோ வாரும் பிள்ளாய் கட்டியக்காரா" என்று பெரிய ஸ்வரத்தில், உரலின் மீது உட்கார்ந்து கிரீடம், புஜகிருதி, வாகுவலயம், கைத்தண்டி, ஒட்டுமீசை, நீண்ட அங்கி இவையணிந்த ராஜா வேஷக்காரன் பாடுவது வெகு ரசமான கூத்து என்கிறார் ஒரு பத்திரிகைக்காரர். இன்னும் நாலு வருஷத்துக்குள் பெடரேஷன் சட்ட சபையில் அத்தனை ராஜா வேஷத்தையும், உட்கார வைத்துப் பார்த்து விடுவதென வெள்ளைக்காரர் நிச்சயித்து விட்டார்களாம்.

ஆபத்தில்லாப் பிரசங்கங்கள்

பிரசங்கம் செய்ய விரும்புகிறவர்களுக்குச் சில அபூர்வ ஆலோசனைகள். வீட்டுக்குள்ளே தேசபக்தியைப் பற்றிப் பேசுங்கள்; வீட்டை விட்டு வெளி வந்ததும் கர்ப்பத்தடைப் பிரசாரம் செய்யுங்கள்; மேடைமேலேறிக் கிராமப் பிரசாரத்தைப் பற்றிக் கதறுங்கள். யாதொரு ஆபத்தும் வரவே வராது.

வால் போச்சுக் கத்தீ வருமோ?

வாலைக் கொடுத்துவிட்டு; கத்தியை மாற்றாக வாங்கிக் கொண்டதாம் ஓர் மந்தி. மந்தியினின்று தோன்றினவன் மனிதனாம்! தங்கள் வாலை யெல்லாம் சேர்த்துக் கட்டிக்கொண்டு வல்லரசுகள் சர்வதேச சங்கம் ஆயுதப் பரிகரண மகாநாடு முதலியவைகளை நடத்திக் கொண்டிருந்தன. ஜர்மனியின் வாலையும், ஜப்பானின் வாலையும் யாரோ அறுத்து விட்டார்களாம். வால் போச்சு, கத்தியைத் தூக்குவார்களா? உலகத்துக்கு என்ன பிரசாதம் தருவார்களோ?

யமபுரி யாத்திரை டிக்கட்

பண நெருக்கடியால் பலன் இல்லாமற் போகவில்லை. மதுரை முனிஸிபாலிட்டியார் தகனக் கட்டணத்தை $4\frac{1}{2}$ ரூபாயிலிருந்து 2 ரூபாய்க்கு குறைத்து விட்டார்களாம். வார்சுகளுக்கு வீண் செலவு உண்டாக்க விரும்பாத சிக்கனப் பெரியோர் இந்த நற்சமயத்தை உபயோகப் படுத்திக் கொண்டு யமபுரிக்கு யாத்திரை புறப்படுவார்களென முனிஸிபாலிட்டி எதிர்பார்க்கிறதா?

நொண்டி நொண்டி நொடிச்சுக்கோ

ஹைஹீல் பூட்ஸ்! தெரியுமா! குதிகாலண்டை கொப்புளம் புறப்பட்டது போன்று ஓர் வகை பூட்ஸுகளை ஆங்கில நாட்டு ஸ்திரீகள் அணிவது வழக்கம். அந்த வழக்கம் அந்த நாட்டில் எப்படிப் புகுந்ததாம் தெரியுமா? இங்கிலாந்திலிருந்த அரசி யொருத்திக்கு காலில் ஆணி நோய் கண்டு காலை 'விந்தி விந்தி' நடந்தாளாம். அரண்மனைத் தாதிமார் அரசிக்குக் கௌரவம் குறையலாகாதென்று தாங்களும் விந்தி விந்தி நடக்கவேண்டுமென்று முடிவு செய்தார்களாம். அதற்குச் சவுகர்யமாகக் குதிகால் கொப்புள பூட்ஸைத் தயாரித்தார்களாம். அந்த பூட்ஸு அப்புறம் F-ஆஷன் ஆகிவிட்டது. ஆனால் அதற்காக நமது இந்தியப் பெண்களி லொருத்தி அந்த பூட்ஸைப் புதிதா[illegible] வாங்கி மாட்டிக்கொண்டு நடக்கத் தெரியாமல் நடந்து பீச்ரோடில் நொடிச்சு அன்றைக்கு ஏன் விழுந்தாளென்று கேட்கின்றேன். புது பூட்ஸின் பிரசாதமா?

வேதாந்தம் படும்பாடு

"வேதாந்தம் காலணா; சித்தாந்தம் அரையணா" என்று கடற்கடை யருகே ஒரு பழம் புத்தகக் கடைக்காரன் கூக்குரலிட்டுக் கொண்டிருந்தான். திடுக்கிட்டு திரும்பிப் பார்த்தால் கரையான் தின்ற வேதாந்த தீபிகைகளைக் காலணா வீதமும், சித்தாந்த கௌமுதிகளை அரையணா வீதமும் விற்றுக் கொண்டிருந்தான். வேதாந்தத்தைவிட சித்தாந்தத்துக்கு அ[illegible] விலை வைத்தது போற்றத் தக்கதே. இப்படி வேதாந்தப் பிரசாதம் வழங்குவது அழகன்றோ!

* * *

அம்மாவின் கொண்டாட்டம்

உபாத்தியாயர்:—உன் தகப்பனார் எப்பொழுது இறந்து போனார்?

மாணவன்:—ஞாபகமில்லை. ஆனால், போன மாதம்தான் எங்கம்மா, எங்கப்பாவின் சிராத்த விழாவைக் கொண்டாடினாள், ஸார்.

* * *

வாத்தியாரம்மாள்:—குஞ்சு, பூ[illegible] ஏன் உருண்டையாயிருக்கிறது என்பதற்குக் காரணம் சொல்லு.

சிறுமி:—அது உருண்டையா யிருப்பதாக, நான் சொல்லவே யில்லையே, அம்மா.

கேலி அல்லது சிங்காரவசவு

(மிஸ்டர் கிண்டல் தொகுத்தவை)

“கேலி” என்பது ஒரு விசித்திரமான ஆயுதமாகும். பிரசங்கமேடை, நியாய ஸ்தலம், சட்டசபை, நாடக அரங்கம் முதலிய இடங்களில் அநேகம் மனிதர்கள் இந்த ஒரே ஒரு மூலபலத்தைக் கொண்டு பல இக்கட்டான சமயங்களில் தப்பித்துக் கொள்ளுகிறார்கள். பெரிய கூட்டங்களில் பொறுப்பில்லாத சில வீணர்கள் வந்து சேர்கிறார்கள்; “கலாட்டா” செய்யவேண்டும் என்ற ஒரே நோக்கத்துடனும் சிலர் வந்து நிற்கிறார்கள். என்னதான் சித்திரமாய்த் தித்திக்கப் பேசினாலும் அவர்கள் ஒடுங்க மாட்டார்கள். குறுக்கே விழுந்து குளறுவது அவர்கள் வாடிக்கை. மனம்போனபடி முரட்டுக் கேள்விகளைப் கேட்பார்கள். நாஸூக்காக அவமானப் படுத்துவதைவிட, அவர்களை மடக்குவதற்கு வேறு வழி கிடையாது. அந்தக் காரியத்தைச் செய்வது கேலி அல்லது நையாண்டிதான்.

கேலியை நாஸூக்குத் திட்டு, சிங்கார வசவு என்றும் சொல்லலாம். கேலிக்குப் பிரமாதமான கருத்து வன்மைகள் ஒன்றும் கிடையாது. பச்சையாகத் திட்டினால், எல்லாருக்கும் திட்டுபவனிடம் கோபம் வரும்; வசவுக்குச் சிங்காரம் செய்து, அதைப் பிரயோகம் பண்ணினால், அது எல்லோருக்கும் நல் விருந்தாகி விடுகிறது. இதுதான் கேலியின் ரகசியம்.

உலகப் பிரபலஸ்தரில் சிலர் இந்தத் தந்திரத்தில் கைதேர்ந்தவர்களாயிருக்கிறார்கள். பிரிட்டிஷ் ராஜீய வாதிகளில் லாயிட் ஜார்ஜைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களல்லவா? இவர் இந்த சாமர்த்தியத்துக்குப் பேர் போனவர். ஒரு சமயம் லாயிட் ஜார்ஜ் பிரசங்கம் செய்துகொண்டிருக்கிறார். அப்பொழுது ஒரு வாயாடி எழுந்திருந்தான்.

“நல்லது, லாயிட் ஜார்ஜ் அவர்களே! உங்கள் தாத்தா ஒரு கழுதை வண்டியோட்டி என்பது உங்களுக்கு ஞாபகமிருக்கிறதோ?” என்று அவன் துடுக்காகக் கேட்டான்.

சில்லறைப் பேர்வழியாயிருந்தால், மனம் பதைத்துப் போயிருக்கும். லாயிட் ஜார்ஜோ கொஞ்சம்கூட அமைதியிழக்கவில்லை. மெதுவாகக் கூட்டத்தைப் பார்த்து அவர் சொல்லலானார்:—“சீமாட்டிகளே! சீமான்களே! என் தாத்தாவின் வண்டி எங்கோ போய்விட்டது; ஆனால் கழுதைமட்டும் இதோ உயிரோடிருப்பதைக் கண்டு பிடித்துவிட்டேன்.” இப்படி லாயிட் ஜார்ஜ் சொன்னதுதான் தாமதம்; கூட்டத்திலிருந்தவர் இடி இடியென்று நகைக்கலாயினர். கேள்வி கேட்ட ஆள் போன இடம் தெரியவில்லை.

இன்னொருதடவை ஆத்திரமடைந்த ஒரு ஸ்திரீ “நான் உமது பெண்டாட்டியாயிருந்தால், உமக்கு விஷத்தைக் கொடுத்திருப்பேன்” என்று இவரிடம் சொன்னாள்.

“அம்மா, பரதேவதா! நீ என் பெண்டாட்டியாயிருந்தால், விஷத்தை ஆட்சேபனையின்றி ஏற்றுக்கொண்டிருப்பேனே” என்றார் லாயிட் ஜார்ஜ். இந்தப் பதிலைக் கேட்ட அந்த ஸ்திரீ இனிமேல் எந்தப் பொதுக்கூட்டத்திலும் வாயையே திறப்பதில்லையென்று முடிவு செய்து விட்டாளாம்!

லாயிட் ஜார்ஜின் வேறொரு பிரசங்கம். “சுய ஆட்சி எல்லா நாட்டுக்குந்தான் வேண்டும்; அயர்லாந்துக்கு வேண்டும்; இங்கிலாந்துக்குவேண்டும்; ஸ்காட்லாந்துக்கு வேண்டும்; வேல்சுக்கு வேண்டும்” என்று அவர் அடுக்கினார்.

ஒரு வம்பன் “நரகலோகத்துக்கு?” என்று கேலியாகக் கேட்டான்.

“பேஷ்! பேஷ்! ஒவ்வொருவரும் இப்படித் தன் தன் நாட்டுக்குப் பரிந்து பேசவேண்டுமென்பதுதான் நான் சொல்லுவதெல்லாம்” என்று நல்ல சூடுகொடுத்தார் லாயிட் ஜார்ஜ்.

இனி, பிரபல நாடகாசிரியரான பெர்னார்ட்ஷா அவர்களின் இரண்டொரு கேலிகளைப் பார்க்கலாம்.

அவர் நாடக மேடைமீது பிரசங்கம் செய்வதற்காக ஏறுகிறார். ஏகமான கரகோஷம். ஒரே ஒரு ஆசாமி மாத்திரம் “பூ! பூ!” என்று இகழ்ச்சியாகக் கத்தினான்.

ஷா நிதானமாகச் சொல்லுகிறார்:—“நண்பரே! உமது அபிப்பிராயம் ரொம்ப சரி; அதை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். ஆனால், இத்தனை பேருக்கு எதிராக, நாம் இரண்டுபேர் இருந்துகொண்டு என்ன செய்வது?”

அழகில் சிறந்த ஒரு நாடக மாது ஷாவுக்கு ஒரு விசித்திரமான கடிதத்தை ஒரு சமயம் எழுதினாள். “நாம் இருவரும் மணந்து இல்லறம் நடத்தவேண்டும். தங்கள் புத்திக் கூர்மையுடனும் எனது சௌந்தரியத்துடனும் ஒரு குழந்தையை நாம் பெற்றெடுத்தால், அது எவ்வளவு நன்றாயிருக்கும்?” என்பது அக்கடிதத்தின் சாரம்.

த்ரிமூலிகா தைலம்

உஷ்ணத்தினால் ஏற்படும் சகலவிதமான நோய்களுக்கும், கண்ணெரிச்சல், தலை கிறுகிறுப்பு, மண்டை இடி, குன்மம், இன்னும் பித்தத்தினால் ஏற்படும் சகல நோய்களையும் நிவர்த்தி செய்யும். இது ஓர் அபூர்வ சஞ்சீவித் தைலம். 8 அவுன்ஸ் புட்டி ரூ. 1-4-0.

லக்ஷ்மி மார்க்கு யூகலிப்ட்ஸ் ஆயில் சுத்தமானது. ஒவ்வொரு குடும்பத்துக்கும் இன்றியமையாதது.

1/2 அ. புட்டி டஜன் 1க்கு ரூ. 1-2-0
1 அ. புட்டி டஜன் 1க்கு ரூ. 1-14-0
4 அ. புட்டி டஜன் 1க்கு ரூ. 5-10-0
} பாக்கிங் தபால் பார்சல் சிலவு வேறு.

கமலா அண்டு கோ.,
65, ராமசாமி தெருவு, ஜி. டி., மதராஸ்.

இதற்கு ஷா எழுதிய ஜோரான பதிலாவது :—"அது நல்லதுதான், அம்மா! ஆனால், பிறக்கும் குழந்தை உன் புத்தியையும் என் அழகையும் கொண்டுவிடுமானால், என்ன செய்வது?"

இங்கிலாந்து தேசத்துச் சரித்திரத்தில் பிரசித்த மடைந்த பிரதம மந்திரிகளுள் பிட் என்பவர் ஒருவர். இவர் மூன்றாம் ஜார்ஜ் காலத்தில் வாழ்ந்தவர். காமன்ஸ் சபையில் ஒரு சமயம் பேசுகையில் இவர் சொன்னதாவது :—"இந்த மூன்றாம் ஜார்ஜ் மன்னருக்கு ஒரு கழுதையின் மூளைகூடக் கிடையாது."

இப்படி இவர் சொன்னவுடனே, "ராஜத்ரோகம்," "பிட் மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டும்" என்ற கூக்குரல்கள் நாலா திசையினின்றும் பலமாகக் கிளம்பிவிட்டன.

பிட் மறுபடியும் எழுந்திருந்தார். "நான் சொன்ன அபிப்பிராயத்தை வாபீஸ் வாங்கிக்கொள்ளுகிறேன். அப்படி நான் சொன்னது தவறு—மூன்றாம் ஜார்ஜ் மன்னருக்கு ஒரு கழுதையின் மூளை நிறைய இருக்கிறது" என்றார் அந்தக் குறும்பு மனிதர். இந்த வணங்கா முடியனை என்ன செய்வது? முதலில் ஆவேசத்தோடு கிளம்பிய ராஜ பக்தர்களெல்லாம், தங்கள் அவமானத்தைக்கூட மறந்து சிரிப்பதைத் தவிர, வேறு என்ன செய்திருக்க முடியும்?

அமெரிக்காவில் நீக்ரோக்களின் முன்னேற்றத்துக்காக உழைத்த பெரியாரான ஆபிரகாம் லிங்கன் ஒரு சமயம் ஆங்கிலப் பிரபு ஒருவருக்குக் கொடுத்த சூடு மிகப் பிரசித்தமானது.

அமெரிக்க குடியரசுத் தலைவராகவீற்றிருந்த லிங்கன் ஒரு நாள் தமது "பூட்ஸு"க்குத் தாமே கறுப்புச் சாயம் பூசினார். இதைப் பார்த்த லையான்ஸ் என்ற ஆங்கிலப் பிரபு, "ஆங்கிலேயர் தங்கள் பூட்ஸுக்குத் தாங்களே இப்படி வர்ணம் பூசுவது வழக்கமில்லை" என்று செருக்கோடு சொன்னார்.

"அப்படியா!" என்று அநாயாசமாய்க் கூவிய லிங்கன், "அப்படியானால், யார் பூட்ஸுக்கு அவர்கள் வர்ணம் பூசுவது வழக்கம்?" என்று குத்தலாக வினவினார். பிரபுவின் செருக்கழிய, அவர் அடைந்த வெட்கத்தைக் கேட்கவும் வேண்டுமோ?



மல்லிகைப் பூ

(ஜோதி பாடியது)

கோணற்கண் பார்வையினிற் கோபங் கொண்டவள்
குதித்துப் பிரிந்து செலுங் கோலங்கண்டபின்,

நாணிப் படுத்துவிடல் நல்லதன்றென
நான்செய்த தந்தி த்தைக் கேட்டிடுவீரே.

காணத் தகுந்தமுற்றப் பந்தரினிலே
கண்ட அழகுடைய மல்லிகைப்பூவை

மாணப் பறித்தவள்தன் பின்னேசென்றவள்
மயிரிற் செருகிவிட்டுக் கைகட்டிநின்றேன்.

திரும்பிச் சிரித்தமுகக் கோலத்தினிலே
சேர்ந்த நகைமல்லிகை யின்முகைபோல

அரும்பித் திகழ்ந்ததொரு வார்த்தை சொல்லுவாள்:
"ஐயோ மயிரைப்பிடித் தாரிழுக்கிறார்!

விரும்பிப் புரப்பவர்இங் கொருவர் இல்லையோ?
விதியோ" எனத்தணிந்த குரலிற் புகன்றாள்.

"கரும்பே! கனிரசமே! நானிருக்கின்றேன்
காப்பேன்" எனப்புகன்று கட்டியணைந்தேன்.

உலக சமாதானம்

(பாரதி தாஸன்)

தன்பெண்டு தன்பிள்ளை சோறுவீடு
சம்பாத்யம் இவையுண்டு தானுண்டென்போன்
சின்னதொரு கடுகுபோல் உள்ளங்கொண்டோன்
தெருவார்க்கும் பயனற்ற சிறியவீணன்!
கன்னலடா என்சிற்றூர் என்போனுள்ளம்
கடுகுக்கு நேர்மூத்த துவரையுள்ளம்
தொன்னையுள்ளம் ஒன்றுண்டு தனதுநாட்டுச்
சுதந்தரத்தால் பிறநாட்டைத் துன்புறுத்தல்.

ஆயுதங்கள் பரிகரிப்பார் அமைதிகாப்பார்
அவரவர்தம் வீடுநகர் நாடுகாக்க
வாயடியும் கையடியும் வளரச்செய்வார்
மாம்பிஞ்சியுள்ளத்தின் பயனும் கண்டோம்!
தூயஉள்ளம் அன்புள்ளம் பெரியஉள்ளம்
தொல்லுலக மக்களெல்லாம் "ஒன்றே" என்னும்
தாயுள்ளம் தனிலன்றோ இன்பம்! ஆங்கே
சண்டையில்லை தன்னலந்தான் தீர்ந்ததாலே.



பாலசரஸ்வதி

(ஹம்சத்தின் விமரிசனம்)

வீணை தனம் சங்கீத உலகில் ஒரு ஜோதி. அந்த ஜோதிக்குப் பிறந்தவள் ஜயம்மாள் என்ற குயில். அந்தக் குயில் பெற்ற குஞ்சு பால சரஸ்வதி. இந்த சங்கீத வம்சத்தின் புகழ் உருவெடுத்துத் தாண்டவமாடத் தொடங்கியதே போல இன்றைக்கு பாலசரஸ்வதி பரத நாட்டியம் பிடிக்கின்றாள். சுருதியோடு கொஞ்சும் குரலையுடைய தாயார் ஜயம் பின்னிருந்து பாட, இந்த யுவதி அபிநயம் பிடிக்கும்போது ரஸிகர் கந்தர்வ லோகத்தை எட்டிப் பார்க்கின்றார்கள். குழப்ப உலகினின்று மனித மனதை அலக்காய்த் தூக்கி விடும் சக்தி சங்கீதத்துக்கும் பரதத்துக்கும் உண்டல்லவா?

பாவம், ராகம், தாளம் இம்மூன்றையும் பிழிந்து கலக்கப்பட்டதே பரதம் என்று சொல்வார்கள். அத்தகைய அம்சங்களின் சம்மேளனத்தை பால சரஸ்வதியிடத்தில் அன்று கண்டேன். பாலசரஸ்வதிக்கு வயது பதினாலுதானிருக்கும். இந்த வயதிலேயே அவளுக்கு இந்த சாஸ்திரம் இவ்வளவு பிடிபட்டிருப்பது ஓர் விந்தையே. பால சரஸ்வதியை 'அழகி' யென்று கூறுவதற்கில்லை. மாநிறம்தான். ஆயினும் அவள் அவ்வாறு இருப்பதால் ரசிகர் மனம், அவளது கலைத்திறனை மட்டுமே பின் பற்றிச் செல்கின்றது. பரத நாட்டியக்காரிகளுக்கு மேனிப் பகட்டு அதிகம் இல்லாதிருப்பது மறைமுகமான ஓர் நன்மையே யென்று இதனின்று தோன்றுகிறதல்லவா?

"கைவழி நயனம் செல்ல
கண்வழி மனமும் செல்ல
ஐய நுண்ணிடையார் ஆடும்
ஆடக அரங்கு"

என்ற கம்பனின் வரிகளைப்பற்றி முதல் நாள்தான் பி. ஸ்ரீ. ஆசார்யா என்ற அறிஞரோடு சம்பாஷித்துக் கொண்டிருந்தேன். மறுநாள் யதேச்சையாக பால சரஸ்வதி நாட்டியத்துக்குப் போக நேரிட அங்கு இந்த கம்ப சித்திரத்தின் உண்மை விளங்கியது. பால சரஸ்வதி அபிநயம் பிடிக்கும்போது கை வழியே கண் செல்கின்றது; கண் வழியே மனமும் செல்கின்றது. அவளது அபிநயம் மட்டுமல்ல, ஜதி வரிசை பேசுவதிலும் அவள் கால்களுக்கு சாமர்த்தியமிருப்பது தெரிந்தது.

வெள்ளைக்காரர்களின் நரி நடனத்தை (Fox-Trot) பயாஸ்கோப்புகளில் பார்த்திருக்கின்றோம். பார்ஸி டான்ஸுகளையும் ஹிந்துஸ்தானி நர்த்தனங்களையும் கண்டிருக்கின்றோம். ஆனால் தென்னாட்டு பரத சாஸ்திரத்திலுள்ள கெடுபிடியான தாளக்கட்டுப்பாடு உலகில் வேறெந்த நடனத்திலும் கிடையாது. கால்கள் லயம் தப்பாமல் அடிவரிசை வைக்கும்போது, கைகள் அபிநயம் காட்டும்; கண், வாய், கழுத்து முதலிய அவயவங்களுக்கும் சந்தர்ப்பத்துக்கேற்ற வேலைகள் உண்டு. இவ்வளவு சமத்காரத்தையும் ஒருங்கே காட்டும்படி கட்டளையிடுவது தென்னாட்டு பரதநாட்டியம். "இதற்கு ஈடாக வேறெந்த நாட்டியத்தையும் கூறுவதற்கில்லை" என்று உதய சங்கர் என்ற பிரசித்தி பெற்ற நாட்டியக்காரனே புகழ்ந்து சொல்வதில் ஆச்சரியமென்ன?

பரத நாட்டியம் கேவலம் தளுக்குக் கலையன்று. அது தெய்வீகக் கலை. அதில் தெய்வீகம் புகுத்தப்பட்டிருத்தலால்தான் வெகு தைரியமாக எல்லா ரசங்களையும் கையாள முடிகின்றது.

"வேகமே பாரோ ஸ்ரீ கிருஷ்ண!" என்ற கண்ணன் பாட்டுக்கு பால சரஸ்வதி அபிநயம் பிடித்துக் காட்டியபோது எவ்வளவு இயற்கையாக இருதது தெரியுமா? அன்போடு ஒரு தாய் எப்படிக் குழந்தையை அழைப்பாளோ அந்த இயற்கை அப்படியே இருந்தது.

'ஜகதோத்தாரகா ஸ்ரீ
உடுப்பி ஸ்ரீ கிருஷ்ணா"

என்ற வரிகளுக்கு அபிநயம் பிடித்துக் காட்டியபோது 'சின்னக் குழந்தை கண்ணன்' என்பது தெளிவாகுமாறு பாலசரஸ்வதி காட்டினாள். 'ஜகத்தை எல்லாம் காக்கவல்ல ஒரு சிறு குழந்தை' என்ற அந்தக் கருத்தில் எவ்வளவு கவிதை! அந்தக் கவிதைக்கேற்ப அவள் காட்டிய அபிநயத்தை என்னென்று புகழ்வது!

"எங்கிருந்தாலும அவரை யெண்ணி
எண்ணி உருக என் தலையில்
எழுதி யிருக்கின்றானடி"

என்று காதலனைப் பிரிந்தவள் உருகுவதாக ஓர் பாட்டு. அந்தப் பாட்டுக்கு இந்த யுவதி காட்டிய பாவங்கள் ரஸிகர் மனதைக் கொள்ளை கொள்வன. எண்ணுதல், உருகுதல், எழுதுதல் போன்ற வினைச் சொற்களுக்குப் பல விதமாகச் சிறந்த ஜாடைகளை அவள் காட்டிய சுவை ஓர் புறமிருக்க, அக் கருத்துகளுக் கேற்றவாறு முகத்தின் மாறுதலையும், உடலின் சோர்வையும் அபிநயித்ததுதான் ஆச்சரியமூட்டிற்று.

சிருங்காரச் சுவையைக் காட்டும் அபிங்யம், கத்தி முனையில் நடப்பது போன்றது. கொஞ்சம் அளவுக்கு மிஞ்சிவிட்டால் ஆபாசமாகி விடும்; குறைந்தாலோ எண்ணத்தைச் சித்தரிக்க முடியாது. ஆடை அகன்றதை அறியாமல் கூத்தாடுவதை சிருங்கார நடனமென்றும், கண்டபடி கண்களைக் கோணல் காட்டுவதை 'பாவம்' என்றும் அநேக நாட்டு நடிகர் எண்ணிக் கொண்டிருக்கின்றனர். இந்த ஒரு சுவையைக் கவுரவமான முறையில் கட்டுப் பாட்டுக்கு அடங்கி நடித்துக் காட்டும் முறை பரத நாட்டியத்தில்தான் இருக்கிறது.

நாட்டிய சாஸ்திரத்தை எழுதிய பரதன் ஓரிடத்தில் பின்வருமாறு சொல்கின்றான்.

"மனிதனால் காட்டப்படும் கலைத்திறமை ஓர் கட்டுப்பாட்டுக்கு அடங்கியே சித்தரிக்கப்பட வேண்டும். ஏனெனில் மனிதனின் அந்தராத்மாவுக்கும் உலக நடவடிக்கைகளுக்கும் பலவித முரண்களுண்டு. ஆகவே தெய்வீக அம்சமாக [illegible]லைகளைச் சித்தரிப்போமாயின் லௌகிக ஆபாசங்களை மறைக்க முடியும்" என்பது பரதன் கருத்து. அக்கருத்தை யொட்டியே நமது சிங்காரப் பதங்களில் முருகனையும், கண்ணனையும் ஆசை நாயகர்களாக வைத்து அபிநயம் பிடிக்கின்றார்கள். கேவலம் சதை வாசனையினின்று மனித மனதைத் தூக்கிவிடும் சக்தியுடையவை அன்று ஜயம் பாடிய பதங்கள்.

"கஸ்தூரி ரங்கனைப் பாராமல் கண்கள் எதற்கு?" என்றும், "அதுவும் சொல்லுவாள்; அதற்கு மேலும் சொல்லுவாள்; அவள் பேரில் குற்றமென்னடி?" என்றும் கேள்வியோடு முடிந்த வரிகளுக்கு பால சரஸ்வதியின் கை, காட்டிய அபிநயம் வெகு பொருத்தமாயிருந்தது. எழுதும்போது?? என்று அடை

யாளம் போடுகின்றோமே, அந்தக் குறி பரதநாட்டியத்தினின்றுதான் எடுக்கப் பட்டதோ என்னவோ என்று தோன் றிற்று. இந்த மாதிரியே அச்சம், திகைப்பு, ஆச்சரியம், சோகம் முதலிய பல உணர்ச்சிகளுக்குக் காட்டிய அபி நயங்களும், உன்னதமாகவே யிருந்தன. "இந்த முறைகள் வட நாட்டு நிருத்தி யத்தில் இவ்வளவு சிறப்பாக இல்லவே யில்லை" யென்று கல்கத்தாவினின்று வந்திருந்த நண்பர்கள் சொன்னார்கள். அது வாஸ்தவமே.

தமிழ்ச்சுவை யறிந்தவர்கட்கும் கர் நாடக சங்கீதத்தை ரசிக்கும் காதுகளை உடையார்கட்கும் பரத நாட்டியத்தின் பூர்ண அர்த்தமும் புரியக்கூடும்.

வடநாட்டினரும் பிறநாட்டினரும் நமது தேச பரதத்தைச் சுவைக்குமாறு செய்ய வேண்டுமானால் நமது நாட்டியக் காரர்கள் சில மாறுதல்களைச் செய்து கொள்வது உசிதம். அபிநய சம்பந்த மான கீர்த்தனைகளையும் பதங்களையும் பாடும்போது ஐயம்மாள பாடுவது போல சுத்தமாகவும் கணீரென்றும் பாடவேண்டும். காலின் நடனத்திற்கு அநுகுணமான பாட்டு, அதற்கடுத்தாற் போல அபிநயம் சம்பந்தமான பாட்டு என்று மாறி மாறி பாட்டுக்களை அமைத் துக் கொள்ளுதல் நலம். திரை தூக்கிய வுடன் திடீரென நாட்டியத்தை ஆரம் பித்தல், அந்தந்த ரஸத்திற் கேற்ற வண்ணம் ஆடையணிதல், சிற்சில சமயங்களில் பாட்டு, நடனம், எல்லா வற்றையும் நிறுத்தி மௌனக்காட்சிகள் காட்டுதல் முதலிய சில தந்திரங்களையும் பரதத்தில் சேர்த்துக்கொள்வது நலம். சபையோருக்கு இன்னின்ன பாட்டுக் கள் என்று விளங்குமாறு ப்ரோகிராம் ஒன்று வழங்குவதும் உபயோகமா யிருக்கும்.

தமிழ் நாட்டில் எவ்வளவோ விதம் விதமான கலைகளை நமது முன்னோர் வளர்த்து வந்தார்கள். பொம்மலாட் டம், தோலாட்டம், கிர்ரு கட்டி வாத்தியம், தவள சங்கம் முதலியன அடியோடு மறைந்து போயின, தமிழ கத்திற் பரத நாட்டியமும் மறைந்து விடுமோ வென்று சந்தேகப் பட்டுக் கொண்டிருந்த வேளையில் இருளில் மின்னல் பளிச்சிடுவதுபோல பால சரஸ்வதி தோன்றியிருக்கிறாள். இப் போது கூட தமிழ் நாட்டில் அநேக மூலைகளில் பரத நாட்டியத்தில் தேர்ந்தவர்கள் இருக்கக் கூடும். அவர்களெல்லாரும் வெளிவந்து இந் தக் கலையுணர்ச்சியை வளர்க்க வேண டும். "திருவாலூர் ஞானத்தோடு பரதமும் போச்சு" என்ற வழக்கு மொழியை மாற்றிவிட வேண்டும்.



உலகப் பிரசித்திப் பெற்ற

ஆ. அப்பாதுரை முதலியார் அண்டு சன்,

பட்டணம் பொடி

காரம், மணம், குணம், நிறம், முதலிய வாடை கமழு கின்றது.

ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் குணம் தங்களுக்கே தெரியவரும்.

ஆ. அப்பாதுரை முதலியார்
அண்டு ஸன்,
புகையிலை கமிஷன் ஏஜண்டுகள், அண்டு மூக்குத்தூள் வியாபாரிகள்.
39, பாரிஷ் வெங்கடாசல ஐயர் தெரு,
தபால் பெட்டி நெ. 189. சென்னை.
தொழிற்சாலை: நெ. 55, ஆச்சாரப்பன் வீதி.

விவாஹத்திற்கு

ரூ. 1000

உங்களுக்கு வேண்டுமா?

விவரங்களுக்கு எமக்கெழுதவும்:—

கலியாண உதவி நிதி,
589, பைகிராப்ட்ஸ் ரோட்,
மதருஸ்.

பிரபல ஜோதிடம்

இராஜாக்களாலும் பிரபுக்களாலும் நன்கு மதிக்கப்பெற்றவர். ஒரு முறை பரீக்ஷியுங் கள். ஒரு வருஷ வாரப் பலன் எழுத ரூ. 7. மாத பலனுக்கு ரூ. 2 ஆருடம் 5-கேள்விக்கு ரூ. 1. விவாக விஷயம் ரூ. 1. ஜாதகம் அல்லது கடிதம் எழுதும் நேரமா வது தேவை.

புதுச்சேரி, வி. தியாராஜ பிள்ளை.
215, தங்கசாலை வீதி,
சென்னை.

எல்லோரையும் எப்பொழுதும் ஏமாற்ற முடியாதென்ற சொல்லால் முக்காலத்திலும் முதன்மை பெற்ற மூதுரையின் முறை பற்றி

வியாபாரம் நடத்தி வருவது எது?

பறவைசூழ் புவியில் பாவலர், நாவலர், ஆவலோடு பன்முறை பட்டணம் பொடி, பட்டணம் பொடி யென பதம் பாடும்

எங்கள்

தென் இந்தியா

பொடிக்களஞ்சியப் பொடியே

விலாசம்:—தென் இந்தியா பொடிக்களஞ்சியம்,
147, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, ஜியார்ஜ் டவுன், மதராஸ்.

மானேஜர், உலகப் பிரசித்திப்பெற்ற
ஷண்முக முதலியார் பௌத்திரர் ஆர். கே. ஜெயராம் முதலியார்

காந்திஜி வருகிறார்

கதரை அணியுங்கள்

மிருகங்களின் பழிக்குப் பழி

திடீரென்று நாளைக்கு உலகம் தலை கீழாக மாறி, ஜீவராசியில் உயர்ந்தது மிருகந்தான் என்றும் மனிதன் மிருகத்துக்கு ஊழியம் செய்ய வேண்டுமென்றும் ஏற்பட்டு விட்டதாயின் மனிதன் பாடு என்னவாகும்?

பல தேசங்களினின்றும் விதம் விதமான மனிசக் குஞ்சுகளைக் கொணர்ந்து கூடுகளி லடைத்துப் போட்டு வேடிக்கை பார்க்க மிருக எஜமான்கள் வருவார்கள்.

எருமை எஜமானை ரிக்ஷாவில் உட்கார வைத்து மனிதன் இழுப்பான்

“தாண்டு சீமைப் பட்டணம்” என்று மனிதனைத் தாண்டச் செய்து குரங்கார் காசு சம்பாதிப்பார்.



சென்னைக் கடுத்த கிண்டி யென்ற இடத்தில் ‘மனிதப் பந்தயம்’ நடக்கும். குதிரையார் வேட்டு அடிப்பார். கழுதையார்களும், குதிரையார்களும் கிரௌண்டுக்கு வந்திருந்து பந்தயப் பணம் வைத்து தோற்றுக் கொண்டேயிருப்பார்கள்.

பட்டம் பறக்குதே பாரு!

(திப்பு எழுதியது)

டெல்லியில் ஓர் யானை மதங்கொண்டு ஓடிற்றாம். F-அடே பூர் ஸிக்ரி என்ற ஊரினின்று ஓர் வஸ்தாத் வந்திருந்தான். அந்த யானையின் வாலைப் பிடித்து அவன் நிறுத்திப் போட்டானாம். மொகலாய சக்கிரவர்த்தி அவனை ராவ்பகதூர் என்று பட்டம் தந்து சன்மானம் செய்தாராம். அந்த ராவ்பகதூர் பட்டம் இன்றைக்கும் வழங்கப்படுகிறது. ஆனால் அப்படிப் பட்டம் பெற்றவர் ஒரு எலி வாலையாவது பிடித்திழுத்து நிறுத்தச் சக்தி யுடையவரா என்றால் சந்தேகம் தான்.

ஸர் கெலஹாட் என்ற ஆங்கிலக் கவிதையைப் பள்ளிக்கூடப் பிள்ளைகள் படித்திருக்கலாம். ஸர் கெலஹாட் என்பான் பெரிய வீரன். ஸர் என்ற பட்டத்துக்கு பொருத்தமானவன். ஆதி காலத்தில் இங்கிலாந்தில் வட்ட மேஜை யொன்றைப் போட்டு அதைச் சுற்றி வாள் வீரர்கள் உட்கார்ந்திருந்தார்கள். ஆர்தர் அரசன் அவர்களுக்குத் தலைமை வகித்திருந்தான். அவன் ஒவ்வொரு வீரனுக்கும் ஸர் பட்டம் கொடுத்திருந்தான். சமீப காலத்தில் இந்தியா சம்பந்தமான வட்டமேஜை மகாநாடு ஒன்று நடந்தது நமக்கு இன்னமும் மறந்துவிடவில்லை. அந்த மகாநாட்டில் பங்கெடுத்துக் கொண்ட சிலருக்கு நைட் ஹுட் அதாவது ஸர் பட்டம் தரவேண்டுமென்று ஆங்கில அரசு ஆலோசித்திருக்கிறதாம். ஆர்தர் அரசனின் நைட்டுகளும் கத்தியை ஆபரணமாக அணிந்திருந்தார்கள். தற்காலத்து கே. ஸி. ஐ. இக்களுக்கும் உடைவாள் தருகின்றார்களாம். ஆனால் தற்காலப் பட்டதாரிகளுக்கு அந்த வாளால் கத்தரிக்காய்கூட அறுக்கத் தெரியாதே என்பதுதான் நமது வருத்தம்.

கூட்டுக் கமிட்டியில் போய்க் கொம்மாளமடித்த சில பிரமுகர்களுக்கு, புது வருஷப் பிறப்போடு புதுப்பட்டங்களும் தரவேண்டுமென ஆங்கில அரசாங்கம் நிச்சயித்திருக்கிறதாம். ஆகா கான் சாயபுக்கு 'லாட்' பட்டம் கிடைக்கலாமாம். ஐயகர் மகானுக்கு ஸர்ர்ர் பட்டம் கிடைக்கலாமாம். வாஸ்தவம், கொடுக்கவேண்டியது தானே. ஆபத்து யாதும் வராமல் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைக் காத்துக் கொடுக்கும் பெரியார்களுக்கு நாலெழுத்து மூன்றெழுத்துப் பட்டங்கள் கொடுத்தால்கூடப் போதாதன்றோ? 1934-ம் வருஷம் முதல் தேதியன்று வெளியாகும் பத்திரிகைகளைப் பார்த்தால் வெகு தமாஷா யிருக்கும்.

எத்தனையோ ராவ் பகதூர்கள் பகல் பகதூர்கள், கான்சாகேப்புக்கள்-கூன் சாகேப்புக்கள், ராஜாக்கள்-கூஜாக்கள், திவான் பகதூர்கள்-திலால் பகதூர்கள் ஆங்காங்கு தோன்றி டீ பார்ட்டிகள் நடத்துவார்கள். கலெக்டர்கள் பட்டமளிப்பு விழாக்களை நடத்துவார்கள். சில பத்திரிகைகள் இந்திரனென்றும் சந்திரனென்றும் தங்கள் தங்கள் ஆட்களை உயர்த்திவைத்துப் பேசும். குறைந்தது ஒரு மாதத்துக்காவது இந்தத் தமாஷைக் கண்டு களிக்கலாம்.

தங்களுக்கு ஏதாவது பட்டம் கிடைக்காதாவென்று தவம் செய்வோர்களும், அதற்காக ஏராளமாகச் செலவு செய்வோர்களும் இந்த நாட்டில் உண்டு. அவர்களில் சிலருக்கு அத்தனை பிரயத்தனம்செய்தும் ஒரு பட்டம் கிடைக்காவிட்டால் ஹா! என்ன ஏமாற்றம்! என்ன பரிதாபம்! அப்படியாக முதல் தேதியன்று மூன்றும் பேஸ்து வந்தது போல சில முண்டாசு மூஞ்சிகள் ஆகிவிடும். எடுத்த காரியத்தில் வெற்றி கிட்டாவிட்டால் ஏக்கம்தானே?

பிரிட்டிஷ் ராஜீயவாதியைப்போன்ற சமத்துப் பேர்வழியை நாம் உலகில் காணமுடியாது. என்ன சாமர்த்தியம்! இரண்டெழுத்தையோ மூன்றெழுத்தையோ 'இனாமா'கக் கொடுத்துவிட்டு நிரந்தர தாஸர்களாக ஓர் கூட்டத்தையே வசியம் செய்ய அவனால் முடிகிறதென்றால் அவன் சமத்தை என்னென்பது? ஏமாறுகிறவர்களைக் குறை கூற வேண்டுமேயன்றி ஏமாற்றுகிறவர்களை விட்டுவிடவேண்டுமென்பது ஒரு நியதி. ஆகவே பிரிட்டிஷாரைக் குறை கூறவே கூடாது.

சிறு வயதில் ஒரு கதை படித்திருக்கிறோம். "ஒரே அடியில் ஐந்து ஜீவனை மடித்தேன்" என்று ஒருவன் மார்பில் எழுதி ஒட்டிக்கொண்டு தெருவோடு போனானாம். அவனை மகா வீரனென ஓர் ராஜா எண்ணி சேனைபதியாக்கி விட்டானாம். அதே மாதிரி தற்காலப் பட்டதாரிகளும் தங்கள் தங்கள் பட்டங்களையும் நெற்றிகளில் எழுதி ஒட்டிக்கொண்டு அலைந்தார்களானால், பொதுஜனங்களுக்குக் கொஞ்சம் சவுகர்யமாக இருக்கும். உலகில் இன்னின்னார் பட்டதாரிகளென்பது தெரியமாட்டேனென்கிறது. அது பொதுஜனங்களின் மீது குற்ற மல்ல. பட்டதாரிகள் பட்டங்களை எழுதி ஒட்டிக் கொண்டு போகாததுதான் காரணமென்று தோன்றுகிறது. ஆகவே அடுத்த வருஷத்திலிருந்தாவது கொஞ்சம் விளம்பர ஞானம் பெறவேண்டுமென்று பட்டதாரிகளைக் கேட்டுக் கொள்ளவேண்டியிருக்கிறது.

மகாத்மா காந்தி, தேசபந்து தாஸ், தேசப்பிரிய சென்குப்தா, தீனபந்து ஆண்ட்ரூஸ், ஆசார்ய ராய், தேசோத்தாரக நாகேஸ்வரராவ், ஸர்தார் படேல், முதலியவர்களுக்கும் சில அட்சரங்கள் விருதுகளாக நாட்டில் வழங்கப்படுகின்றன. சர்க்கார் அந்தப் பட்டங்களைத் தரவில்லை யென்பது மட்டும் உறுதி. ஆனால் அவர்களுக்குத் தர சர்க்காரிடம் பட்டங்கள் இருக்கிறதாவென்பதும் சந்தேகம். அப்படியே தந்தாலும் அவர்கள் வசிப்பார்களாவென்பதும் சந்தேகம். காந்திஜிக்கு சர்க்காரால் முன்னொரு காலத்தில் தரப்பட்ட ஓர் சன்மானப் பதக்கத்தை அவர் சமுத்திரத்தில் எறிந்து விட்டாராம். ஆசைப்பட்டவர்கள் அதைத் தேடிப் பிடித்து எடுத்து மாட்டிக் கொள்ளட்டும், நமக்கு ஆக்ஷேபனை யில்லை. ரவீந்திரநாத் டாகூர் ஜாலியன் வாலா பாக் படு கொலைக்குப் பின்னர் தமது ஸர் பட்டத்தை வாபீஸ் செய்து விட்டாராம். அந்த மாதிரி அவர் செய்தது சரியன்று என்று

சொல்கிற பேர்களும் உண்டு. ஸௌத் இண்டியன் ரெயில்வே விளம்பரம் போன்று மூன்றெழுத்துக்காக அடித்துக் கொள்ளும் மக்கள் இருக்கும் போது இந்தப் பேச்சுக்கள் வருவது சகஜம்தானே.

ஆனால் பட்டதாரிகளுக் கெல்லாம் ஒரே ஒரு எச்சரிக்கை. அமெரிக்கா, Fரான்ஸ் போன்ற பெரிய பெரிய நாடுகளிலுள்ள மகான்களுக்கு இந்த மாதிரி பட்டம் பெறும் பாக்கியம் கிடைப்பதில்லை. அதிருஷ்ட வசத்தினால் இந்தியாவில் பிறந்தவர்களுக்குத்தான் கிடைத்துக் கொண்டிருக்கிறது. ஒரு வேளை சுயராஜ்ய சர்க்கார் வந்து விட்டால் இந்தப் பட்டங்களெல்லாம் பறந்து போகுமோ என்னவோ? ஆகவே காற்றுள்ளபோதே பட்டம் விட வேண்டும். சீக்ரத்தில் வாங்க வேண்டிய பட்டங்களை யெல்லாம் வசூல் செய்து விடுங்கள். போனால் வராது; பொழுது விடிந்தால் கிடைக்காது!

இன்னொரு எச்சரிக்கையும் செய்ய வேண்டியிருக்கிறது. நாடோடிகளாக அவ்வப்போது பிற நாடுகளில் பிரயாணம் செய்யும் இந்தியப் பட்டதாரிகள் சிலருண்டு. அவர்கள் சில எச்சரிக்கைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஸ்பெயின் தேச அரசாங்கம் பட்டதாரிகளுக்குப் பரம விரோதி. அங்கு பெயரோடு ஏதாவது பட்டம் சேர்த்து விலாசம் எழுதிப் போடப் பட்டால், அந்தக் கடிதங்களைத் தபாலாபீஸ் குப்பைத் தொட்டியில் போட வேண்டு மென்று சட்டம். தயவு செய்து ஸ்பெயினுக்கு எழுதும் கடிதங்களிலும், ஸ்பெயினில் போஸ்ட் செய்யும் கடிதங்களிலும் ஸர். திவான், பகதூர், ஏ. பி. ஸி. டி. எல்லாவற்றையும் மறந்து விடுங்கள்.

இன்னொன்று; தேசத்தில் இப்போது பரம மோசடி யொன்று கிளம்பி யிருக்கிறது. சில சங்கங்களும், சர்க்கார் வசமில்லாத சில பள்ளிக்கூடங்களும் தங்கள் அன்பர்களுக்கு ஏ. பி. ஸி. டி. எழுத்துக்களைத் தானம் செய்து விடுகின்றன. அதை யெல்லாம் லெட்டர் பேப்பரில் அச்சடித்துக்கொண்டு அலைகிறார்கள். இந்த மோசடியைத் தடுக்க வேண்டும். அதிருக்கட்டும்! 1934ல் யார் யாருக்குப் பட்டங்கள் வரப்போகின்றன என்பது இப்போதே 'அவுட்' ஆகி விட்டதானால் சொல்லி யனுப்புங்கள்.

கோடம்பாக்கம் வைத்தியசாலைத் திறப்பு

கிராமாபிவிருத்தி வேலை

தேசத்தின் புனருத்தாரணம் கிராமங்களை அபிவிருத்தி செய்வதில்தான் இருக்கிறது என்று இப்பொழுது ஒவ்வொரு தலைவரும் கூற ஆரம்பித்திருக்கிறார்கள். இப்பேர்ப்பட்ட சமயத்தில் சென்ற ஞாயிற்றுக்கிழமை கோடம்பாக்கத்தில் திறக்கப்பட்ட ஆஸ்பத்திரியின் உபயோகத்தைப்பற்றி வர்ணித்துச் சொல்வது அதிகப்படியாகும்.

சர்க்கார் அட்வகேட் ஜெனரலான ஸர் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் அவ்விழாவுக்குத் தலைமை வகித்தார். திறந்து வைத்தவரோ மாகாணத்திலேயே மிகப் பிரபல டாக்டரான ஸ்ரீமான் எஸ். ரெங்காச்சாரியார். மேலும், மாஜி ஹைக்கோர்ட் ஜட்ஜி வி. பாஷ்யம் அய்யங்கார், ஸ்ரீமான் பி. ஜகன்னாததாஸ், 'ஹரிஜன்' ஆசிரியர் சாஸ்திரியார், அவர்மனைவி, வி. டி. நிம்கர் தம்பதிகள், ருக்மணி லட்சுமிபதி, குஜராத்திப் பிரமுகர்களான ஸ்ரீயுத ரூப்சந்த் பிரதாப்மல், ஸ்ரீயுத புரோஹித், அடையார் ஏர்னஸ்ட்வுட் தம்பதிகள் இவர்களும் இன்னும் பல பிரமுகர்களும் இதற்கு விஜயம் செய்திருந்தார்கள். ஹரிஜனக் குழந்தைகளும் கிராமவாசிகளுமாகப் பலர் இவ்வைபவத்தைக் காண வந்திருந்தார்கள்.

"சங்கு" காரியாலயத்தைச் சேர்ந்தவரும் கோடம்பாக்கம் சேவையில் ஈடுபட்டிருப்பவருமான ஸ்ரீயுத எஸ்.கணேசன் பிரரேபிக்க, ஹரிஜனத்தலைவர் ஸ்ரீமான் பழனி ஆமோதித்ததும், தலைவர் ஸர் அல்லாடி அக்கிராசனம் வகித்தார். கிராமாபிவிருத்தியின் அவசியத்தை அவர் அழகாக விளக்கியுரைத்தார்.

பின்னர், இவ்வைத்திய சாலையை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றுள்ள டாக்டர் சுந்திரம் (பி. ஏ., எல். எம். எஸ்., பி. எஸ். எஸ்.) அவர்கள் ஒவ்வொரு நாளும் மாலை 3 மணி துவங்கி 6 மணி வரையில் இது திறந்திருக்குமென்றும், கிராமவாசிகள் இங்கு வந்து வைத்திய உதவி பெற்றுக் கொள்ள வேண்டுமென்றும் தெரிவித்தார்.

டாக்டர் ரெங்காச்சாரியார் எழுந்து "எனக்குப் பேசத் தெரியாது; ஏதோ சொற்பவேலை செய்யத்தான் தெரியும்" என்று சொன்னபோது, களங்கமற்ற அவரது பணிவு எல்லார் மனதையும் வசீகரித்தது. அவர் தொழில் முறையில் பேசுவது போலவே, சாமான்யமான எளிய தமிழில் சில சுகாதார உண்மைகளைக் கூறினார். "சௌக்கியமாயிருப்பது கஷ்டமில்லை. உணவுக்கும் கொஞ்சம் தானியம், சொற்பக் காய்கறி, கீரை, பால் அல்லது மோர் இவை வேண்டும். நமது உஷ்ண தேசத்தில் ஆடம்பரமான துணி மணிகள் வேண்டியதில்லை. நாங்கள் வெறும் பாவனைக் காகவே இத்தனையும் போட்டுச் சுமந்துகொண் டிருக்கிறோம். சொற்பத் துணி போதும். ஆகையால், இந்த ஆஸ்பத்திரி, வைத்திய உதவி செய்வதோடு மாத்திரம் நின்று விடாமல், இயற்கை வாழ்வு என்ற இலட்சியத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக அடைவதற்கு ஓர் வழி காட்டியாகவும் இருக்கும் என்று நம்புகிறேன்" என்று சொல்லி முடித்தார்.

பிறகு, குஜராத்தித் தலைவர் ஸ்ரீயுத புரோஹித் அவர்களும் சங்கு ஸுப்ரஹ்மண்யன் அவர்களும் பேசினார்கள்.

கடைசியில் வந்தனம் செலுத்திய ஸ்ரீயுத ஆரோக்கியசாமி கூறிய இரண்டு யோசனைகள் குறிப்பிடத்தக்கவை. "டாக்டர் ரெங்காச்சாரியார் மாதமொரு முறையாவது இங்கு வந்து இந்த ஆஸ்பத்திரி நன்றாய் நடக்கிறதா வென்று கவனித்துக் கொள்ளவேண்டும்" என்றும் "ஸர் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் தமது ஒரு மாதச் சம்பளத்தை இந்தத் தொண்டுக்கு நன்கொடை கொடுத்தால், இதற்குப் பண சிரமமே ஏற்படாதல்லவா?" என்றும் அவர் சொன்னபோது, சபையில் கரகோஷம் மிகுத்தது.

கடைசியில் குழந்தைகளுக்குப் பழம் முதலியன வழங்க, விழா இனிது நிறைவேறியது.

இந்த சமயத்தில் இன்னோர் சந்தோஷச் செய்தியையும் இங்குக் குறிப்பிடுதல் பொருத்தமா யிருக்கும். கோடம்பாக்கத்தில் கூடியசீக்கிரம் கைத்தொழிற் கலாசாலை யொன்று திறக்கவும் ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. மகாத்மா காந்தி இந்தப் பக்கத்திற்கு விஜயம் செய்யும் போது அவரே அதைத் திறந்து வைப்பார்.

"மரப்பாச்சி வீடு."

("ராஜாத்தி"யின் கடிதம்)

அன்புக்குரிய ரங்கம்,

பழைய கதை; நான் சொல்லப் போவது பழைய கதைதான். ஆனால், அது நித்த நித்தம் வெவ்வேறு ரூபத்தில் எங்கும் நிகழ்ந்து கொண்டிருக்கும் கதை. காரியம் மிஞ்சிப்போன பிறகு நாம் கூக்குரல் போடுகிறோம். ஆபாச அசுகாதார நிலைமைகளை விட்டு வைக்கிறோம். நோய் வருகிறது. அப்பொழுதும் ஆரம்பத்திலேயே சரியாக வைத்தியம் செய்வதில்லை. ஜன்னி பிறந்து விடுகிறது. பித்துப் பிடித்தவர்போல ஆரவாரம் செய்கிறோம். காரியம் மிஞ்சிப் போய்விடுகிறது! ஸ்திரீ புருஷ தர்மமும் இப்படிப்பட்டதுதான். இதற்கு உதாரணமாக உலகப் பிரசித்தமான ஒரு நாடகத்திலுள்ள காட்சியொன்றை உனக்குக் காட்டப்போகிறேன்.

நாடகத்தை எழுதியவர் நார்வே தேசத்து ஆசிரியர் இப்ஸன். "மரப்பாச்சி வீடு" என்ற பிரசித்தமான நாடகம். அதிலுள்ள காட்சியொன்றை நான் மொழிபெயர்த்துத் தருவதால், வீட்டுக்கு வீடு இப்படித்தான் நடக்க வேண்டும் என்பதாக, நான் சொல்லுவதாய் நினைத்துவிடாதே. காட்சி, கணவனுக்கும் மனைவிக்கும் நடக்கும் சம்பாஷணை. பெயர்களை மாற்றியிருக்கிறேன். இனி, அந்தத் தர்க்கத்தைப் படி.

* * *

கமலம் :—வீட்டில் அப்பா நினைக்கிறபடி நானும் நினைக்கவேண்டும். என் அபிப்பிராயத்தை நான் மூடி வைத்துக் கொள்ளுவேன். என்னை அவர் ஒரு செல்ல மரப்பாச்சியாக வைத்துக் கொண்டிருந்தார். பிறகு, உன் வீட்டில் வாழ வந்தேன்—அப்பா கையிலிருந்து மாறி உன் கைக்கு வந்துசேர்ந்தேன். உன் விருப்பப்படியே நீ எல்லாவற்றையும் செய்கிறாய். எனக்கும் ஆசைகள் உண்டு; விருப்பங்கள் உண்டு. நீ அதை நினைப்பதேயில்லை. எனது வாழ்வைப்பற்றி நான் யோசித்துப் பார்த்தேன்—நான் ஒரு பிச்சைக்காரி; போட்டதைத் தின்று கோண்டு கிடக்கிறேன். உன் இஷ்டத்தைப் பூர்த்தி செய்வதற்கு வேண்டிய ஜாலங்களைச் செய்து கொண்டு கிடக்கிறேன். நான் என்ன செய்வது? உனக்கு அந்த ஜாலங்கள் வேண்டியிருக்கிறதே! நீயும், அப்பாவும் எனக்குப் பெரிய அநீதியைச் செய்து விட்டீர்கள்.

வேணு :—கமலா, மூளையில்லாமல் பேசுகிறாயே! நன்றியுமா இல்லை? இங்கே நீ மகிழ்ச்சியோ டில்லையா?

கமலம் :—மகிழ்ச்சியா? இல்லவே யில்லை. ஆடிப்பாடிக்கொண்டு இருக்கிறேன். ஆனால் மகிழ்ச்சியாயில்லை. எனக்கு உன் வீடு, குழந்தைகளின் மணல் வீடுபோல்தா னிருக்கிறது. பிறந்த வீட்டில் அப்பாவின் மரப்பாச்சியா யிருந்தேன்; இங்கே உன்னுடைய மரப்பாச்சியா யிருக்கிறேன். குழந்தைகளை வைத்துக்கொண்டு நான் விளையாடுகிறேன். அவை என்னுடைய மரப்பாச்சிகள். குழந்தைகளோடு நான் விளையாடும்போது அவற்றுக்குத் தமாஷாயிருக்கிறது. அதே மாதிரிதான் நீ என்னோடு விளையாடும்பொழுதும் எனக்குத் தமாஷா யிருக்கிறது. இதுதான் நமது தாப்பத்ய வாழ்வு; வெறும் தமாஷ்! நான் இந்த வீட்டைவிட்டே வெளியேறிவிடப் போகிறேன்.

வேணு :—(குதித்தெழுந்து) என்ன? என்ன சொல்லுகிறாய்?

கமலம் :—நான் சுதந்திரமா யிருக்க வேண்டும். என்னை அறிந்து கொள்ள வேண்டும்; உலகத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும்

வேணு :—கமலா! கமலா! உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது!—உன் வீட்டைத் துறந்து, உன் புருஷனைக் கைவிட்டு, உன் குழந்தைகளைத் தவிக்கவிட்டு ஓடிவிடவா உத்தேசித்திருக்கிறாய்? உன்னைப்பற்றி உலகம் என்ன சொல்லும் என்பதையாவது யோசித்துப் பார், அம்மா!

கமலம் :—உலகத்தின் அபிப்பிராயத்தைப் பற்றி நான் ஏன் கவலைப்பட வேண்டும்? நான் செய்ய வேண்டியது எனக்குத்தான் தெரியும்?

வேணு :—உலகத்திலேயே மிகப் புனிதமான தர்மங்களை நீ மறந்துவிட்டாய்! உன் கணவனுக்கும் குழந்தைகளுக்கும் செய்ய வேண்டிய கடமைகள் உனக்குத் தெரியவில்லையா?

கமலம் :—எனக்கு வேறு கடமைகளும் உண்டு; அவையும் புனிதமானவைதான்.

வேணு :- வேறு கடமைகளா? அப்படியும் சில இருக்கின்றனவா, என்ன?

கமலம் :—இல்லாமலென்ன, நிறைய இருக்கின்றன; என் சொந்த குணம், புத்தி முதலியவற்றின் வளர்ச்சிக்கு வேண்டிய கடமைகள் அவை.

வேணு :—நீ என் மனைவி; நமது குழந்தைகளின் தாய்—எங்களுக்குப் புரிய வேண்டிய கடமைகள்தான் உனது மற்றெல்லாக் கடமைகளிலும் முக்கியமானவை.

கமலம் :—எனக்கு இப்பொழுது அந்த மாதிரி நம்பிக்கையில்லை. நான் ஒரு மனிதப் பிறவி—இந்தப் பிறவியை மேன்மையுறச் செய்வதே எனது மற்றெல்லாக் கடமைகளிலும் உயர்ந்த தர்மம். உன்னைப் போலத்தான் நானும் ஒரு மனித ஜன்மம். இப்பொழுது அப்படி யில்லாவிட்டாலும், இனி மேலாவது அவ்வாறு மனித ஜன்மமாய் இருக்கவே முயற்சிக்கப் போகிறேன்.

* * *

ரங்கம், இதைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்? கமலத்தின் மீது உனக்குக் கோபம் ஏற்படுமா? நான் அவ்வாறு எண்ணவில்லை, அனுதாபமே ஏற்பட்டிருக்குமென்று நினைக்கிறேன்.

பெண்களுக்கு மனம் உண்டு; ஆசைகள் உண்டு; அறிவு உண்டு. இவற்றை அடியோடு மறந்த உலகத்தில் இல்லற தர்மம் என்ற ஒன்று எப்படி நடக்க முடியும்? அதுதான் எனக்கு விளங்கவில்லை. அதை விளக்கத்தான் உனக்கு நான் இந்தக் கதையைச் சொன்னது. வேறு விதமாக நினைத்துக் கொள்ளாதே. அப்படி ஏதாவது நினைக்க இக் கடிதம் இடம் கொடுக்குமானால், அதற்கு என்னை மன்னித்து, என் நோக்கத்துக்குச் செலுத்தக் கூடிய மதிப்பைச் செலுத்து. உன் நேச

ராஜாத்தி.



டிராம் வண்டிக்காரன்

மஞ்சேரி ஈசுவரன் எழுதியது.

நான் அப்பொழுது 'கஸ்டம்ஸ் ஆபீஸி'ல் ஏற்றுமதி இறக்குமதி வரிக்கணக்கு எழுதும் குமாஸ்தாவாக இருந்தேன்.

ஒரு ஜூன் மாத ஞாயிற்றுக் கிழமை; ஞாயிறென்றால் ஓய்வு நாளல்ல; மிகவும் அவசரமான வேலைகளைச் செய்து தீர்க்க ஏற்பட்ட தினம். ஒரு வழியாய் கத்தைகளைக் கட்டி வைத்துவிட்டு, ஆபீஸின் புழுக்கத்திலிருந்து தப்பித்துக்கொண்டு துறைமுகத்தி னருகில் ஓய்வில்லாமல் உபமானமா யுழைத்துக் கொண்டிருக்கும் கூலியாட்களையும், சுமை தூக்கும் யந்திரங்களையும் பார்த்துக் கொண்டு சுமார் ஒரு மணி நேரம் அலைந்தேன். துறைமுக மதிலில் அலைகள் மோதும் சப்தம் காதில் இன்பம் நிரம்புமாறு விழுந்து கொண்டிருந்தது. அங்கிருந்த நிலையில் எனக்குத் தூக்க போதை அளிக்கப்பட்டது போலிருந்தது; ஆனால் எனக்காக வீட்டில் காத்துக் கொண்டிருக்கும் என் மனைவியின் நினைவு உடனே தோன்ற, அவளுக்குக் காலையில் கொடுத்த வாக்கின் பிரகாரம் சீக்கிரம் திரும்ப வேண்டுமென்று நிச்சயித்துக் கொண்டு துறைமுகத்தை விட்டு வெளிவந்தேன்.

சாலையில் அம்பட்டன் வாராவதி 'டிராம்' நின்று கொண்டிருந்தது. டிராமில் ஒருவருமில்லை. 'டிக்கட்' கொடுக்கும் 'கண்டக்டர்' ஒரு பக்கத்தில் கொட்டாவி விட்டுக்கொண்டிருந்தான். நான் வண்டியில் குதித்தேறினதும், ஊதலை ஊதி கண்டக்டர் வண்டியைக் கிளப்பினான். டிராம் வண்டி வேகமாக ஓடியது. அதன் சப்தம் காதைத் தொளைத்தது. கண்டக்டருக்கு என்னை நன்றாய்த் தெரியும். பிரதிதினமும் சூர்யன் உதித்து மறைவதுபோல தவறாமல் நானும் அந்த டிராம் மார்க்கத்தில் வந்துபோய்க் கொண்டிருந்தேன். எனக்கு 'ஸீஸன் பாஸ்' இருக்கிறதும் கண்டக்டருக்குத் தெரிந்த விஷயமே; என்னோடு கொஞ்சம் பேச்சுக் கொடுக்க அவன் நினைத்தான் போலும். 'புன்னகை' என்ற பிள்ளையார் சுழியோடு கண்டக்டர் என்னிடம் நெருங்கி வந்தான். எனக்கும் பேச சங்கோஜமாக இருந்தது. "ஞாயிற்றுக்கிழமை கூடவா, ஸார், ஆபீஸ்?" என்று அவன் கேட்க, 'ஆம்' என்று பதிலளிக்காமலேயே தலையை அசைத்தேன். அசைந்த என் தலையில் எழுதியிருக்கும் தலையெழுத்தைப் படிப்பவன்போல் அவன் நோக்கினான். நானெழுதும் எழுத்தால் மைக் கறுப்பேறிக் கரி ரத்தம் கட்டிக் கொண்டன போல் தோன்றும் என் விரல்களைக் கவலை கொண்டவனாய் உற்றுப் பார்த்தான்; "எழுதி எழுதித் தள்ளுகிறாப் போலிருக்கிறது" என்று விசாரித்தான்.

"என்ன செய்வது? நாம் எழுதித்தான் தொலைக்க வேண்டியிருக்கு" என்று சொல்லி விட்டு, சற்று என்னை அறியாமல் நான் ப்ரயோகித்த பன்மையின் பெருமையை அனுபவித்த வண்ணம் இருந்தேன்.

"நாங்களோ (ஊதலை) ஊதி ஊதி நாள் தள்ள வேண்டியிருக்கிறது" என்றான் அவன்; கண்டக்டருக்கும் கற்பனையாய் கொஞ்சம் பேசத் தெரியுமென்பதை உணர்ந்தேன்.

டிராம் வண்டி கொஞ்சம் அழுது கொண்டும் கொஞ்சம் முழுவேகத்தோடு ஒரே ஆட்டமாயாடிக் கொண்டு 'பாரீஸ்கார்னரை அடைந்ததும் 'நில்' என்றொரு குரல் கேட்டது. கண்டக்டர் ஊதலை ஊதினான்; டிராம் ஓட்டியோ மெய்மறந்திருந்தான்; ஆகவே மறுபடியும் கடுமையாய் கண்டக்டர் ஊத டிராம் ஓட்டி அழகு காட்டுபவன்போல் மூஞ்சியை வைத்துக்கொண்டு கண்டக்டரைத் திரும்பி பார்த்துவிட்டு, பிடியை ஒரு தரம் தன்னுடலுடன் சுழற்றினான்; திரும்பும் மூலையில் திடீரென்று அதிர்ச்சியுடன் வண்டி நின்றது.

அப்படியே மூன்று நிமிஷங்களுக்கு மேல் வண்டி நிற்க வேண்டியதாயிற்று. த்ரிவிக்ரமாவதாரத்தில் ப்ரபஞ்சத்தை மூன்றே அடிகளிலளந்த நெடு மாலைப் போல் மூன்றே அடிகள் வைத்து என் பக்கத்திலிருந்த கண்டக்டர் டிராமின் பின் கோடிக்கு வந்தான். வரும் ஆளை ஏற்றிக் கொள்வதற்காக அங்கேயே சற்று நின்றான்.

நான் திரும்பிப் பார்த்தேன்; சுமார் முப்பத்தைந்து வயதுள்ள ஒருவன் சிரமத்துடன் வண்டியில் தட்டித்தட்டிக்கொண்டு படிகளில் ஏறி உள்ளே வந்து விசுபலகையில் உட்கார்ந்தான். அவனது வலதுகால் முட்டிக்குக் கீழே மரத்தால் செய்யப்பட்டபொய்க்காலும், அதன் அடியில் இருப்புப் பூணும் அலங்கரித்திருந்ததை நான் கண்டேன். தன் நெற்றி வேர்வையைத் துடைத்துக் கொண்டு, டிராமோட்டியை ஓர் தடவை வெறித்து நோக்கி "என்னடா கழுதே?" என்று அவன் குசலப்ரச்னம் செய்தான். அந்த வண்டியை ஓட்டி வந்த 'கழுதே' கத்தாமல் பல்லை இளித்தது; ஒரு வேளை அந்த டிரைவருக்கு காது கொஞ்சம் மத்யமோ என்றும் நான் ஐயமுற்றேன்.

மறுபடியும் பிரமாதமான சத்தத்துடன் டிராம் கிளம்பிற்று; அந்தச் சத்தத்தின் ச்ருதியில் கண்டக்டரும் 'மரக்கால்'காரனும் தத்தம் தலைகளை அசைத்துக் கொண்டும், கண்களைச் சிமிட்டிக்கொண்டும், சிரித்துக்கொண்டும் பேச ஆரம்பித்தனர். 'ரொம்ப வேண்டியவர்கள் போலிருக்கு' என்று

நான் எண்ணிக்கொண்டேன். கொஞ்ச தூரம் வண்டி ஓடினதும் இரண்டு ப்ரயாணிகள் ஏறினார்கள். 'வேண்டுமானால் இங்கு வண்டிகள் நிற்கும்' என்று போட்டிருக்கும் அடுத்த நீல போர்டுக்கு எதிரில் வண்டி நின்றது. மனம் முறிந்த, அதுவரையில் வண்டியில் என் பக்கத்தில் உட்கார்ந்து வந்து கொண்டிருந்த அந்தக் கால் முறிந்தவன் இறங்கிச் சென்றான். போகும் அவனை நான் ஏதோ நினைத்துக்கொண்டு ஒரு புறமிருந்து நோக்க, மற்றொரு புறமிருந்து அவனது நண்பன் கண்டக்டர், ஏதோ பழைய ஞாபகங்கள் அலை அலையாய் மனதில் கிளம்பினதுபோல் பார்த்துக் கொண்டிருந்தான்.

'மரக்கால்காரன்' வண்டிச் சத்தத்தைக் கொடுக்கவில்லை; அவனைப் பார்த்தால் 'பாஸ்' உள்ளவனாகவே தோன்றவில்லை. 'கண்டக்டரும் அவனிடம் சத்தம் கேட்கவில்லையே? அதற்குக் காரணம் என்ன?'' என்று யோசித்துக்கொண்டு கண்டக்டரை நான் என் பக்கம் அழைக்க உத்தேசித்த நிமிஷமே, கண்டக்டர் தானாகவே என்னிடம் வந்தான்.

"ரொம்ப நல்ல பயல் ஸார்; எங்களைப்போல அவனும் டிராம்வே கம்பெனியின் வேலைக்காரனாக இருந்தான். ரொம்ப சுறுசுறுப்பானவன்; அவனைப்போல் டிராம் ஓட்டுபவர்களே இல்லை. காக்கி சட்டை நிஜார் எல்லாவற்றையும் சுத்தமாய் சவுக்காரம் போட்டு வைத்துக் கொள்வான்; அவனுடைய சட்டையின் பித்தளைப் பொத்தான்களெல்லாம் சிறு சிறு சந்திரன்கள் போல எப்பொழுதும் பளபளவென்றிருக்கும்; ஆனால், பாவம், காலை இழந்தான்; அத்துடன் வேலையையு மிழந்தான்'' என்று கண்டக்டர் அனுதாபமான குரலில் கூறினான்.

"எந்த ஸம்பவத்தில் அவனுக்குக் கால் போச்சு? வண்டிகள் மோதிக் கொண்டதிலேயா?'' என்று நான் விசாரித்தேன்.

"இல்லை; ....அவனேதான் அதற்குக் காரணம்.''

"என்ன அது?''

"அது நடந்து இப்பொழுது பத்து வருஷகாலம் ஆய்விட்டது; ஆனாலும் இப்பொழுது நடந்தாற்போல எனக்கு ஞாபகம் இருக்கிறது. அவன் பெயர் என்னவென்று உங்களுக்குச் சொல்லவில்லையே; எல்லன் என்பது அவன் பெயர். உடம்பில் அவன் வயதுக்குமேல் அவனுக்கு ரத்தக்கொழுப்பு இருந்தது; ஆகவே கடவுள் தண்டித்துவிட்டார்!''—என்று சொல்லிக்கொண்டு வரும்பொழுதே கண்டக்டருடைய சரீரம் இறங்கத் தொடங்கிற்று.

"அவனுக்கு அப்பொழுது கல்யாணமாயிருந்ததா?''

"அவன் தையல் நாயகி என்றொரு பெண்ணைக் கட்டிக்கொண்டிருந்தான்; அவள் தங்கமான பெண்; ஆனால் வள்ளச்சி என்ற இன்னொருத்தி இருந்தாள்; அவளுக்கு எப்படி வலைபோடுகிறதென்று நன்றாய்த் தெரியும். வள்ளச்சி ஒரு பழக்காரி; ஒரு கூடை பழத்தை எடுத்துக் கொண்டு 'ரௌண்டாணா' கிட்ட உட்காருவாள். அவள் ரொம்ப ரொம்ப ஜாலக்குக்காரி, ஸார்; இருபதுவயது; நல்ல வளர்த்தியான உடம்பு; காப்பி நிறம்; கருத்த கண்; கண்ட எல்லாருடைய மனத்தையும் அபகரிக்காமல் விடமாட்டாள்.

"எல்லனும் வள்ளச்சியும் எங்கே, எப்படி முதல் முதலாகக்கண்டு நேசம் கொண்டார்களென்பது மட்டும் எனக்குத் தெரியாது. ஆனால் நாங்கள் இதை மட்டும் தினந்தோறும் பார்ப்போம்: நிறுத்துமிடம் இல்லாது போனாலும் எல்லன் வள்ளச்சி இருக்குமிடத்தில் டிராமை திடீரென நிறுத்துவான்; சிரிப்பு வெள்ளமாய்ப் பொங்கும் அவனுக்கு; அவளும் சிரிப்பாள்; ஒரு குதி குதித்து எல்லன் அவளிடம் சென்று இரண்டு நார்த்தைகளைப் பிடுங்கிக் கொண்டு வருவான்; உடனே அவளைப் பார்த்துக்கொண்டே டிராமை நடத்துவான். இப்படித் தவறாமல் ஒவ்வொரு நாளும் நடந்து வந்தது. அநேகமாய் இருவருக்கும் வெகுநாள் நட்பாயிருக்கலாம். எங்களால் 'புலி' என்று பெயர் வைக்கப்பட்ட ஷம்ஸுடீன் என்ற ஸப் இன்ஸ்பெக்டர் இதை எப்படியோ கவனித்திருந்து, எல்லனை இனி அமமாதிரி அவ்விடத்தில் வண்டியை நிறுத்தினால் வேலை போய்விடும் என்று இரண்டு மூன்று முறை எச்சரிக்கை செய்தார். ஆனால் எல்லனுக்கு ஒருவரும் லக்ஷ்யமேயில்லை''........

"வள்ளச்சி ஒன்றுதான் அவனுக்கு லக்ஷ்யம்'' என்று நான் நடுவே கதையைப்புரிந்துகொண்டதற்கு அடையாளமாகச் சொன்னேன். "ஆமாம்; பாவம்; சிறிது காலத்திற்கெல்லாம் விஷயங்கள் கெட்டுப் போயின. எங்களுக்கெல்லாம் ரொம்ப வேண்டியவனாயிருந்த அந்தப் பயல் என்னமோ ஒருபெரிய சிடுமூஞ்சி ஆய் விட்டான். "பஞ்சாப் மெயில் போகிறது பார்'' என்று கூறி, திடீரென்று வண்டியை அதிக வேகத்தில் விரட்டுவான்; நிற்க வேண்டிய இடங்களில் நாங்கள் எவ்வளவு தடவை ஊதினாலும் ஒன்றும் பலிக்காது; என்ன இருந்தாலும் அவனுடைய திறமையில் நம்பினவர்களாக அபாயம் ஒன்றும் நேராதென்று நாங்கள் கவலைப்படாமலிருந்தோம்; ஆனால் அபாயமோ, ஒரு நாள், நேர்ந்து விட்டது!

"ஒரு திங்கட்கிழமை; காலை சுமார் மணி 11 இருக்கலாம்; 52 நெ. அம்பட்டன் வாராவதி வண்டியை எல்லன் ஓட்டிக்கொண்டிருந்தான். நான் அன்று அந்த வண்டியிலேயே கண்டக்டர். அன்று காலை வண்டி எடுக்கும்போதே அவன் ஏதோ மனங்கலங்கி இருந்தான்; ஆனால் வெளிப்படையாய் ஒன்றையும் காட்டிக் கொள்ளவில்லை. '52' நாலாவது தரம் திரும்பி 'டௌன் டிரிப்' அடித்துக்கொண்டிருந்தது; வண்டி முழுதும் ஜனங்கள் ஏறி இருந்தனர்; எல்லன் நிதானமாகப் பத்து மைல் வேகத்தில் ஓட்டி வந்தான்; 'ரௌண்ட் டாணா' வந்தது; அதுதான் வள்ளச்சி இருக்குமிடம்; வண்டிப் பிடியை விட்டு விட்டுத் திடீரென எல்லன் கீழே பாய்ந்தான்; மறு நொடியில் நான் ஓடிப்போய் 'ப்ரேக்கை' பிடித்துக் கொண்டு எல்லனைத் திரும்பிப் பார்த்தேன்! ஒரு மோட்டார் 'ஹார்ண்' சப்தம் என்னைத் திடுக்கிடச் செய்தது. க்ரீச் என்று அந்த மோட்டார் நிற்கவே அதன் ரப்பர் 'ரோதை' கள் தேய்ந்த சப்தமும் கேட்டது. கீழே தரையில் துண்டித்துப்போய் தனியாய் ஒரு மனிதனின் கால் கிடந்ததை நான் கண்டேன்.

"மறு நாள் நான் லீவு வாங்கிக் கொண்டு 'ஜெனரல்' ஆஸ்பத்திரிக்குச் சென்றேன். அங்கே தன் பெயரைப் பறி கொடுத்து விட்டு, தான் ஓட்டும் டிராம் வண்டிபோல் ஒரு நம்பரை மாட்டிக்கொண்டு எல்லன் நொண்டியாய்க் கிடக்கக் கண்டேன். காயம் ஆறுவதற்காக அவன் ஆஸ்பத்திரியில் நான்கு மாதம் இருக்கவேண்டி இருந்தது. நான் வாரத்துக்கு ஒரு முறை ஆஸ்பத்திரிக்குப் போய்ப் பார்த்துக்கொண்டு வந்தேன்; அவன் மனைவியும் வருவதுண்டு. அந்தக் கழுதைப் பயலுக்கோ

'வள்ளச்சி வரவில்லையே, தன்னைப் பார்க்கவில்லையே, அவள் இரண்டு நார்த்தைகளை எடுத்துக்கொண்டு தன்னைப்பார்க்க வரமாட்டாளா?' என்று ஏக்கம். இரண்டொரு தரம் வாய் விட்டு அவ்விஷயமாய்ப் பேசவும் ஆரம்பித்தான்; நான் உடனே அவன் வாயைக் கட்டினேன். தன் காலை முறித்துக் கொள்ளும்படி தான் குதித்தோடியதற்குமட்டும் காரணத்தை அவன் என்னிடம் வெகுநாள் சொல்லவேஇல்லை; கடைசியாகத் தனக்கே தாங்காமல் ஒரு நாள் சொல்லிவிட்டான்.

'சில நாளாய் அந்த வள்ளச்சி என்னிடம் பாராமுகமாய் இருந்தாள்; அன்று காலை அந்தக் கழுதை தன் தாவணி விலகினது அறியாமல் உல்லாசமாக அங்கு ஒரு சிறுபயலிடம் சிரித்துக் குலாவிக் கொண்டிருந்தது; அது மட்டுமன்று; அவன் மூஞ்சியைப்பார்த்துக் கொண்டே அவனுக்கு நார்த்தை ஒன்றை மெள்ள மெள்ள உரித்துக் கொடுத்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு என் ஸம்பாத்யத்தில் பாதியைக் கொட்டியிருக்கேனே, அப்படி யிருக்க, அந்த மாதிரி அவளிருந்ததை நான் பார்க்கச் சகிப்பேனா?'

"இப்படி அவன் கதையைச் சொல்ல நானொன்றும் பதிலுரைக்கவில்லை; என்ன பதில் சொல்லுகிறது, ஸார்.

"நான்கு மாதங்களானதும் எல்லன் கன்னம் குழிந்து கிண்ணியாய்ப்போய், பேய்போல் விழித்துக்கொண்டு, மரக்காலணிந்துகொண்டு ஆஸ்பத்திரியிலிருந்து வெளிவந்தான். வெளியே, டிராம் வண்டிகள் ஓடின; பஸ்ஸுகள் ஓடின; மனிதர்களும் ஓடிக் கொண்டிருந்தார்கள்; எல்லன் ரஸ்தாவைப்பார்த்தான்; தன்காலையும் பார்த்துக்கொண்டான்; அவன் கண்கள் பஞ்சடைந்தாற்போலாயின.

"அவன் மனைவி முன்னிலும் பன்மடங்கு அவனிடம் அன்புடன் நடந்துகொண்டாள். மூன்று பெரிய வீடுகளில் கூலியாளாய் அமர்ந்து, தரை கழுவி, பாத்திரங்கள் விளக்கி, எல்லனுடைய வயிற்றுக்கும், தன்னுடைய வயிற்றுக்கும் போதுமான அளவு சம்பாதித்துக்கொண்டிருந்தாள். தையல்நாயகி அன்பும் சோறுமாய்க் கலந்து ஊட்டவே விரைவாய் எல்லனின் உடம்பு வலிமையடைந்து வளர்ந்தது; ஆனால் அவன் மனத்தில் மட்டும் வள்ளச்சியே குடிகொண்டிருந்தாள்.

"வள்ளச்சியை இருமுறை அவன் அதற்குப்பிறகு போய்ப் பார்த்தானாம்! புன்னகை போய், கேலிச் சிரிப்புச் சிரித்து, நார்த்தம் தோலியை அவனது மரக்காலைநோக்கி வள்ளச்சி விட்டெறிந்தாளாம். அப்படி அவள் செய்தும் மூன்றும் தடவை எல்லன் நொண்டி நொண்டிக்கொண்டு 'ரௌண்ட்டானா' போக எத்தனித்தானாம். அவன் மனைவிக்கு வள்ளச்சி ஸமாசாரம் சிறிது தெரிய வந்தது. அவள் மிகவும் புத்திசாலி; எல்லனது மரக் காலை எடுத்து அன்று சமயலுக்கு விறகாக உபயோகித்துவிட்டாள்! மறுநாளே எல்லன் வேறோர் மரக்காலைச் சம்பாதித்து மாட்டிக் கொண்டான். அவன் ரௌண்ட்டானாவுக்கு ஒரு தடவை புறப்பட்டானாகில் ஒரு மரக்கால் கொள்ளியில் போடப்பட்டு வந்தது.

"திடீரென ஒரு நாள் தன்கடைசி மரக் கால் அடுப்பில் எரிந்துகொண்டிருக்கும் பொழுது எல்லனுக்கு ஏதோ தோன்றிற்று; அவன் மனதிலிருந்த கோபமும், எரிச்சலும், வள்ளச்சியைப் பற்றிய எண்ணங்களும் மரக் காலுடன் தீக்கிரையாயின.

"எல்லன் இப்பொழுது ஒழுங்காகக் குடும்பத்தை நடத்திவருகிறான்; அவர்களுக்கு சின்னப்பயலொருத்தன் பிறந்திருக்கிறான்" என்று திருப்திகரமான குரலில் கண்டக்டர் கூறினான்.

"நன்றாய் முடிந்தது கதை" என்று நான் ஒரு மூச்சு விட்டேன்; டிராம் வண்டியும் "ஐஸ்ஹௌஸ் ஸ்டேஷனி"ல் ஒரு மூச்சுவிட்டு நின்றது.

மாயை சூழ்ந்த ரூபாய்

('தாரகன்' எழுதியது)

"எனக்குத் தெரிந்து விட்டது, சுவாமீ! உமக்குத்தான் தலைவலியாயிருக்கிறது" என்று சில விஷயங்களில் நாம் செருக்காகப் பேசிவிடுகிறோம். அந்த மாதிரி சங்கதிகளில் (1) கடவுள். (2) நாணயச் செலாவணி. இந்த இரண்டும் வெகு பத்திரமான பொருள்கள். இவ்விரண்டு விஷயங்களையும் பற்றி யார் வேண்டுமானாலும் தெரிந்ததாகப் பேசலாம்; தெரியாததாகவும் பேசலாம். "பண்டிதர்கள் அபிப்பிராயத்தில் வேறு பாடுகள் இருக்குமானால், மாணாக்கர்பாடு கொண்டாட்டம்" என்று ஒரு பழமொழி உண்டு. கடவுளைப் பற்றியும் சரி, நாணயச் செலாவணியைப் பற்றியும் சரி, வெகு காலமாகப் பண்டிதர்கள் வெவ்வேறு விதமாகவே அபிப்பிராயம் சொல்லி வந்திருக்கிறார்கள். இந்த இரண்டு சங்கதிகளையும் பற்றி, பாமர மக்களுக்கு ஒன்றும் விளங்காது என்றும் அவர்கள் திட்டமாய்ச் சொல்லியிருக்கிறார்கள். ஆகையால், அந்தப் பண்டிதரின் புத்தகத்தைக் கையில் பிரித்து, பேனாவைப் பிடித்தவர்களெல்லாம் இந்த இரண்டு சாமான்களைப் பற்றியும் விஸ்தாரமாக எழுத ஆரம்பித்துவிடலாம்.

ஆனால், கடவுள் எப்படிப்போனாலும் சரி, இந்த நாணயச் செலாவணி மாத்திரம் சுலபத்தில் பிடிபடாத விசித்திர வஸ்துவாயிருக்கிறது. ஒருக்கால் இதுதான் கடவுளின் மாயையோ என்று கூடத் தோன்றுகிறது. ஏற்கனவேயே நாணயச் செலாவணி என்ற விஷயம் இவ்வளவு தகராறானதாயிருக்கும் பொழுது, இந்திய நாணயச் செலாவணியோடு, பிரிட்டிஷ் நாணயமான ஸ்டர்லிங் வந்து சம்பந்தங் கொண்டாடிக் கொண்டிருப்பதால், பெரிய விபரீதம் ஏற்பட்டிருக்கிறது. சாதாரணமாக, ஒரு நாட்டு நாணயத்தின் மதிப்பு என்ன, காலத்துக்குக் காலம் அதை எப்படி யெல்லாம் மாற்றிக் கொண்டால் தேசத்துக்கு க்ஷேமம் என்பதை நிர்ணயிப்பதே வெகு கஷ்டமான சங்கதி. அந்தந்த தேசத்தின் இயற்கையமைப்பு, தொழில், விளைவு, ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம், பழக்க வழக்கங்கள், நடந்த யுத்தம், நடக்கப் போகிற யுத்தம் இத்தனை சங்கதிகளும் சேர்ந்துதான் ஒரு தேசத்தின் விலைவாசிகளைப் பாதிக்கின்றன. இந்த விலைகள், நாணயத்தின் உலோக மதிப்பு, சர்க்கார் நோட்டு வெளியீடு, சேமநிதி இவை யாவும் சேர்ந்துதான் ஒரு தேசத்தின் நாணயத்துக்கு ஒரு மதிப்பை நிர்ணயம் செய்கின்றன. இவ்வளவு சமாசாரங்களையும் ஒருவன் ஆராய்வதென்றாலே அவனுக்குத் தலைவலி எடுத்து

விடும் என்பது உண்மைதான். ஆனல், நமது தேசநாணயத்தை, பிரிட்டனின் இத்தனை தொல்லைகளுக்கும் ஆளான ஸ்டர்லிங் என்ற நாணயம் வேறு வந்து பிடித்து இழுத்துக் கொண்டு, விட மாட்டேனென்று சண்டிசெய்கிறது.

நமது வெள்ளி ரூபாய்க்குச் சொந்த மான மதிப்பு ஒன்றும் கிடையாது. ரூ. 13-5-4 கொடுத்தால், அது ஒரு ஸ்டர்லிங்குக்குச் சமமாகும். இவ்வாறு இந்திய ரூபாயையும் பிரிட்டிஷ் ஸ்டர்லிங்கையும் சர்க்கார் பிணைபோட்டு வைத்திருக்கிறார்கள். இதற்குத்தான் 18 பென்ஸ் நாணயமாற்று விகிதம் என்று பெயர். நாம் வெளிநாடுகளோடு வியாபாரம் செய்ய வேண்டுமானல், இந்த விகிதத்தின்படிதான் நமது நாணயத்துக்கு மதிப்புக் கொடுக்கப் படுகிறது. ஆனல், இந்த ஸ்டர்லிங்கு என்பது என்ன? அது ஒரு மாயா ரூபிணியாகவே யிருக்கிறது. லண்டன் உயர்தர நீதி மன்றம் ஒன்றில் சமீபத்தில் இதைப் பற்றி நடந்திருக்கும் ஒரு விவாதத்தைப் பார்த்தால் இதன் உண்மை விளங்கும்.

வக்கீல் வில்லியம் கிரீன் :—ஸ்டெர்லிங் என்பதற்குப் பழமையான அர்த்தம் ஒரு வெள்ளிப் பென்னி (அதாவது ஏறக்குறைய ஒரு அணு) என்பது தான்.

நீதிபதி வாரிங்டன் பிரபு :—அப்பொழுது பவுன் என்று வழங்கி வந்த நாணயம் சொக்க வெள்ளிக் காசல்லவா?

நீதிபதி வ்ரைட் பிரபு:—நமது இங்கிலாந்து பாங்கி 'ஒரு ஸ்டர்லிங்' நோட்டுகள் வெளியிட்டிருக்கிற தன்றோ? "இந்த நோட்டைக் கொண்டு வந்து கொடுப்பவனிடம் ஒரு பவுன் கொடுப்பதாக உறுதி கூறுகிறோம்" என்று அவற்றில் எழுதியிருக்கிறதே; இதன் சரியான அர்த்தம் யாது?

வக்கீல் கிரீன் :—"மாற்றுயர்ந்த தங்கம் சில ராத்தல் நிறை தருகிறோம்" என்றுதான் அர்த்தம்.

விரைட் பிரபு :—ஆனல், பாங்கிக்காரர்கள் அப்படிக் கொடுக்க மாட்டோமென்கிறார்களே?

நீதிபதி டாம்லின் பிரபு :—"இந்த நோட்டைக் கொடுத்தால் அதற்குப் பர்த்தியாகத் தங்கம் கிடைக்காது" என்று தெளிவாகச் சட்டமே செய்திருக்கிறார்க ளல்லவா?

வக்கீல் கிரீன் :—சட்டம் செய்திருக்கிறார்கள்; அது சரிதான். ஆனல், நோட்டின்மேல் உறுதி மொழி கூறப்பட்டிருக்கிறதே. அதற்கென்ன அர்த்தம்?

டாம்லின் பிரபு :—அதற்கு அர்த்தம் சொல்லுகிறேன், கேளும். நீர் இந்தக் கடிதாசைக் கொடுத்தீரானல், அவர்கள் இன்னொரு துண்டுக் கடிதாசை உமக்குக் கொடுப்பார்கள்.

நீதிபதி ஆட்கின் பிரபு :—அவர் சொல்லுவது சரியல்ல. ஸ்டர்லிங் நோட்டுக்குப் பர்த்தியாக, பாங்குக்காரர்கள் இரண்டு வெள்ளி நாணயங்கள் தருவார்கள்.

விரைட் பிரபு:—அப்படியும் கொடுக்கலாம்; அல்லது 10 ஷில்லிங் நோட்டுகள் இரண்டைத் தந்தாலும் தரலாம்.

இதோடு கோர்ட்டில் இந்த வாக்குவாதத்தை நிறுத்தி விட்டார்கள். இதனல் என்ன விளங்குகிறது? சட்டப்படி ஒரு ஸ்டர்லிங்கு என்றால் என்ன, அதற்கு ஏதாவது மதிப்பு உண்டா அல்லது கிடையவே கிடையாதா என்ற விஷயம் எவருக்குமே புரியாது என்பது தெளிவாகின்றதல்லவா?

இப்படி மாயா ரூபிணியாய் விளங்கும் பிரிட்டிஷ் ஸ்டர்லிங்குடன்தான் நமது வெள்ளி ரூபாயை, சர்க்கார் பிணைத்திருக்கிறது. இந்த பந்தத்திலிருந்து ரூபாய் விடுதலை யடைந்தாலன்றி, நமது நாணயத்துக்கும் அதனல் நமது ஜனங்களுக்கும் விமோசனம் ஏற்படவே போவதில்லை யென்றுதான் நமக்குத் தோன்றுகிறது.

இது சம்பந்தமாக ஸர் மாண்டேகு வெப் என்பவர் சொல்லியிருக்கும் முடிவுகளை நமது மனத்தில் பதித்துக் கொள்வது நலமாகும்.

அவர் சொல்லுகிறார் :—

(1) இந்தியாவுக்கு முன்போல சுத்தமான வெள்ளி ரூபாய் வேண்டும்; அதைத் தங்கத்துடனே ஸ்டர்லிங்குடனே பிணையல் போடக் கூடாது; லண்டனிலுள்ள தங்கப் பித்தர்கள் அதை ஆட்டிவைக்கவும் கூடாது.

(2) இந்தியச் சேமநிதி பாங்கி ஒன்று ஏற்பட்டு, இந்திய நாணச் செலாவணியை நிர்வகிக்க வேண்டும்.

(3) ரூபாயின் நாணய மதிப்பைத் தளர்த்தி விலைகள் உயருமாறு செய்ய வேண்டும்.

(4) தங்கத்தையே நாணய மதிப்புக்கு ஆதாரமாக வைத்துக் கொள்ளாமல், தங்கம் வெள்ளி இரண்டுக்கும் நாணய மதிப்பு வைத்துக் கொள்ள வேண்டும்.

(5) சாதாரணமாக ரூபாய்க்கு 16 பென்சு நாணய மாற்று விகிதத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

(6) உலகத்தில் தங்கப் பஞ்சம் ஏற்பட்டிருப்பதால், சட்ட ரீதியாக வெள்ளிக்கு மதிப்புக் கொடுத்தால் தான் மறுபடியும் செழிப்பு ஏற்படும்.

(7) இந்தியா தங்கத்தை மறந்து வெள்ளித் திட்டத்தை மாத்திரமே தனது நாணயச் செலாவணிக்கு மதிப்பாக வைத்துக் கொண்டால் கூடப் போதும்; ஜப்பான், சீனவுடன் மாத்திரமல்ல, முழு உலகத்தோடுமே இந்தியா போட்டி போட்டு வெற்றி பெறலாம்.



கோடம்பாக்கம்
கைத் தொழிற் கலாசாலை

மகாத்மா காந்தி சென்னைக்கு விஜயம் செய்யும்போது மேற்படி கைத் தொழிற்சாலையைத் திறந்து வைப்பார்.

இக் கலாசாலையில் வசிப்பதற்கும் உணவுக்கும் வசதி செய்யப் படும். தையல், தோல் பதனிடுதல், பாதரட்சை செய்தல், பாய் முடைதல், தச்சு வேலை முதலிய தொழில்கள் ஆரம்பத்தில் கற்றுக் கொடுக்கப்படும். வசதிகளின் அபிவிருத்திக் கேற்ப, பின்னல் வேறு தொழில்கள் பயிற்று விக்கவும் முயற்சி செய்யப்படும். 12 வயதுக்கு மேற்பட்டவர்கள் இதில் சேரலாம். தகுதியுள்ள விண்ணப்பங்கள் கவனிக்கப் படும். "கணேசன், கோடம்பாக்கம் கிராமாபிவிருத்தி சங்கக் காரியதரிசி, 8-c, பைக்ராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை" என்ற விலாசத்துக்கு விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும்.



டோலெட்

எழுத்துரிமைக்குப் போராடிய வீரன்

(சக்கரவர்த்தி ஸ்ரீநிவாசன் எழுதியது)

ஸ்வதந்திரம் மனிதனது பிறப்புரிமை; சுயேச்சை அவனது இயற்கை உணர்வு; இவ்வுணர்ச்சியின் உத்வேகமே விடுதலைப் போராக மிளிர்கின்றது. ஸ்வதந்திரத்தின் முதல்படி பேச்சு ஸ்வதந்திரம், எழுத்து ஸ்வதந்திரம்; அடிமைப் புத்தியில் ஆழ்ந்து கிடக்கும் தன் தேச மக்களைத் தட்டி யெழுப்பவே தேசத் தலைவன், நாட்டுப் போர் வீரன், பேச்சு, எழுத்து ஸ்வதந்திரங்களைக் கோருகிறான். பேச்சு மூலமாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ தன் விடுதலை வேட்கையைத் தணித்துக் கொள்ள அவன் விழைகிறான்; விரைகிறான். ஆனால் அவ்விரண்டுக்கும் துரைத்தனம் பூட்டிடுமாகில் அவன் தன் மன எண்ணங்களை வாய்விட்டுச் சொல்லி, சட்டத்தை மீறியதற்காக, எத் தண்டனையையும் அனுபவிக்கத் தயாராகின்றான். மத விஷயங்களுக்கும் இது பொருத்தமானதே.

எடியன் டோலெட் என்பான் இத்தகைய வீரமணிகளி லொருவன். டோலெட் பிரஞ்சுக்காரன்; மகா பிடிவாதக்காரன்; உயிரை விட்டாலும் விடுவானே யல்லாது தான் எடுத்த காரியத்தை விடமாட்டான். பிரான்ஸில் அப்பொழுது மக்களுக்கு அறிவுத் தெளிவு ஏற்பட்டு, புத்தகங்களைப் படிப்பதில் ஆர்வமுண்டான காலம். அப்பொழுதுதான் டோலெட் பிறந்தான். மார்ட்டின் லூதர் என்ற பேரறிஞர் அப்பொழுது தான் ஐரோப்பாவில் சீர்திருத்த உணர்ச்சியைப் பரப்ப அரும்பாடு பட்டு வந்தார்.

கிறிஸ்தவ மதத்தை ஸ்தாபித்தவர் இயேசு கிறிஸ்து; அதுபோன்று பிரான்ஸில் மக்கள் மனதில் சிந்தித்ததைத் தைரியமாக வெளியிடுவதற்குக் கர்த்தாவாக விளங்கியவன் டோலெட். அவன் அறிவு வளர்ச்சிக்காகவே வாழ்ந்தான்; கலைமகளின் பீடத்திலேயே பிராணனையும் விட்டான்.

இவனது தாய் தந்தையர் இன்னாரென்பது தெரியவில்லை. வாலிபத்தில் இவனுக்கு நல்ல ஆதரவு கிடைத்தது. லத்தீன் பாஷையைக் கற்பதிலும் சமய நூல்களை ஆராய்வதிலும் இவன் விசேஷ கவனஞ் செலுத்தினான்; 17-வது வயதில் பதுவா என்னுமிடத்திலுள்ள இதாலிய சர்வ கலாசாலையில் சேர்ந்தான். நான்கு வருஷங்களுக்கு இங்கு கல்வி பயின்றதும் கிரேக்கக் குடியரசின் பிரெஞ்சுப் பிரதிநிதியாகச் சென்ற லிமோகெஸ் பாதிரியாரின் அந்தரங்கக் காரியதரிசியாக வேலையிலமர்ந்தான். அப்பொழுது இவனுக்கு 21 வயதுதான்; இந்த வேலையுடன் இவன் ஒரு பிரஸித்தி பெற்ற பண்டிதரின் உபந்நியாசங்களையும் கேட்டு, அறிவைப் பெருக்கி வந்தான்.

டோலவுஸ் என்ற இடத்தில் சட்டப் படிப்புப் படிப்பதற்காக, இவன் தன் சொந்த ஊருக்குத் திரும்பினான். இங்குதான் இவனது கஷ்டங்கள் ஆரம்பித்தன. வெளிநாடுகளைச் சேர்ந்த பலர் அந்த சர்வ கலாசாலையில் சேர்ந்திருந்தனர். ஒவ்வொரு தேசத்தினரும் ஒரு தொகுதியாகப் பிரிக்கப்பட்டனர்; அவரவர்கள் தங்கள் தங்கள் தேசத்துக் கொடியை வணங்கி, தங்கள் மத குருவின் தினத்தை வருஷா வருஷம் வெகு விமரிசையாகக் கொண்டாடினர். ஆனால் நாட்கள் செல்லச் செல்ல, இவைகளெல்லாம் அதிக மும்மரமாக நடைபெற்று வருவதைக் கண்ட பார்லிமெண்டு சபை, இவை சம்பந்தமான கூட்டங்களையும் பிரசங்கங்களையும் தடுத்து விட்டது. இவ்வுத்தரவை எதிர்த்துத் தீருவதென மாணவர்கள் முடிவு செய்தனர்; டோலெட்தான் அவர்களது தலைவனாக விளங்கினான்.

இக்காரணம் கொண்டே அரசாங்கம் இவனை மிகவும் ஆபத்தான பேர்வழி எனக் குறித்துக் கொண்டது.

இச்சமயத்தில் ஒரு துரதிஷ்டவசமான சம்பவமும் நிகழ்ந்தது. ஒரு நாள் யாரோ சிலர் அவனைத் தெருவில் மடக்கிக்கொண்டு பலமாக அடித்தனர். தன் உயிரைக் காத்துக் கொள்வதற்காக ஏற்பட்ட சண்டையில் அந்த எதிரியைப் பலமாக டோலெட் தாக்கியதால் எதிரி செத்துவிட்டான். டோலெட் கைதியாக்கப்பட்டுச் சிறையில் வைக்கப்பெற்று, மூன்று தினங்களுக்குப் பின், இனிமேல் அந்த ஊருக்குள் கால் வைக்கலாகாது என்ற நிபந்தனையின் பேரில் விடுதலை செய்யப்பட்டான்.

அவன் டோலவுஸிலிருந்து நேராகப் பாரிஸுக்குச் சென்றான். அங்கு பிரான்ஸிஸ் அரசனிடமிருந்து மன்னிப்புப் பெற்றுக்கொண்டு, லத்தீன் பாஷையைக் குறித்துத் தான் எழுதிய வியாக்யானங்களடங்கிய இரண்டு வால்யூம்களையும் அவனுக்கே அர்ப்பணம் செய்தான்.

இவ்வெழுத்துப் பிரதிகளைப் புத்தகமாக அச்சிட்டுத் தரக்கூடியவர் எவரேனும் கிடைப்பார்களா என்று அலைந்து கொண்டு அவன் லியான்ஸ் என்னுமிடத்திற்குச் சென்றான். இந்த இடத்தில்தான் அப்பொழுது பிரெஞ்சுப் புத்தக வியாபாரம் செழிப்புற்றிருந்தது. அக்காலத்தில் பிரான்ஸ் தேசத்தின் மகா கவியாக விளங்கியவர் க்ளேமெண்ட் மாரெட் என்பவர். அவரைச் சிநேகஞ் செய்து கொண்டான் டோலெட். மத விரோதமான குற்றத்தைச் செய்துவிட்டதற்காக இதாலி நாட்டிற்கு ஓடிப்போயிருந்த மாரெட்

படம் பிடிக்கும் நேரம்:
காலை 8 மணி முதல்
இரவு 8 மணி வரை
(டெலிபோன் நெ. 3419)

வருஷாந்திர அறிக்கை
(சில நாட்களுக்கு மாத்திரம்)
12 × 10 அளவுள்ள பெரிய போட்டோ.
ஒன்று ரூ. 3-க்கு எங்கள் கம்பெனியில் படம் பிடித்துத் தரப்படும்.

R. தாஸன் ஸ்டுடியோ
எலக்டிரிக் போடோ ஆர்டிஸ்ட்ஸ்,
55, ரெடன் பஜார் ரோடு,
மதராஸ்.

பிரான்ஸிஸ் அரசனைச் சந்தித்துத் தம்மை எப்படியாவது காப்பாற்ற வேண்டுமென்று கோருவதற்காக அப்பொழுது வந்திருந்தார். மாரெட்டும், டோலெட்டும் ராஜனுக்கு மகஜர் அனுப்பினர். மாரெட்டைத் தமது பழைய குற்றங்களுக்காகப் பரிகாரம் தேடும்படி அரசன் உத்தரவிட்டான்; டோலெட்டைப் பொறுத்த மட்டில் அவனுக்குப் பத்து வருஷ காலத்திற்கு லத்தீன், கிரீக், இதாலி, அல்லது பிரெஞ்சு பாஷைகளில் புத்தகங்களை அச்சிட்டு வெளியிட லைசென்ஸ் கொடுத்தான். ஆனால் அச்சிடுவதற்கு முன்னால் அவன் தன்னுடைய எழுத்துப் பிரதிகளை மட்டும் பாரிஸ், லியான்ஸ் இவ்விரண்டிடங்களிலிருந்த சில அதிகாரிகளுக்குக் காட்டவேண்டுமென்ற நிபந்தனையு மிருந்தது.

மாரெட் மன்னிப்பு கேட்டுக்கொண்டார்; டோலெட் லியான்ஸ் நகரத்தில் ஒரு அச்சாபீஸ் ஏற்படுத்தினான்; சிறிது காலத்திற்குத்தான் அது நிலைத்திருந்ததாயினும், அதற்குள் அது விசேஷ வெற்றியையும், புகழையும் சம்பாதித்துக்கொண்டு விட்டது. இருவரும் துடிப்பு மிகுந்தவர்கள்; எதையும் தொட்டுத் தொட்டுப் பார்த்து, மீண்டும் மீண்டும் யோசித்து யோசித்து, ஜாக்கிரதையுடன் செய்யும் வழக்கம் அவர்களிடம் கிடையாது. நெஞ்சுதீரம் படைத்தவர்கள். எண்ணங்களை எழுத்துக்களாகப் பொறிக்கையில் பேனாவை அடக்கமாக உபயோகிப்பவர்கள் அவர்களல்ல!

லத்தீன் பாஷையைப் பற்றி டோலெட் எழுதிய பாஷ்யம் எண்ணற்ற பிரதிகளாக அச்சிடப்பட்டு, விற்பனையாயிற்று. ஆனால் "புதிய சங்கல்பம்" என்பன போன்ற அவர்களுடைய இதர நூல்கள் பதினாயிரக் கணக்கில் செலவழிந்தன. ஆனால் அதற்குள் அவனது விரோதிகள் அவனை வீழ்த்த ஏற்பாடு செய்தனர். 1542-ம் வருஷத்தில் அவன் அரசாங்கத்தால் கைது செய்யப்பட்டான்; மத விரோதமான புத்தகங்களை எழுதி வெளியிட்டானென்று அவன்மீது குற்றஞ் சாட்டப்பட்டது.

நான்கு வருஷகாலம் அவன் சிறைக்குப் போவதும், வெளி வருவதுமாகவே யிருந்தான். இறுதியாக அவனைத் தூக்கிலிட்டு, அவனது புத்தகங்களை எரித்துத் தள்ளும்படி மத அதிகாரிகளால் உத்தரவாயிற்று. இதில் பிரான்ஸிஸ் அரசன் தலையிடவேயில்லை. பாரிஸிலுள்ள மாபர்ட் என்னுமிடத்திலே டோலெட் சிரச்சேதம் செய்யப்பட்டான்.

இவைதான் அவனது கடைசி மொழிகள்:

"எனக்காக நான் துளிக்கூட வருந்தவில்லை; ஆனால் விஷயங்களை அறிந்து கொள்ள முடியாது. அறியாமையிலாழ்ந்திருக்கும் ஜனங்களுக்காகத்தான் நான் வருந்துகிறேன்."

அன்று பிரான்ஸின் மண் மீது டோலட்டுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்காக இன்றும் அந்தத் தேசம் வருந்துகிறது. டோலெட்டை ஒரு மகா வீரனாக, ஸ்வதந்திர புருஷனாக இன்றைக்கும் அது கொண்டாடுகிறது. பிரான்சு தேசத்தில் பேச்சு ஸ்வதந்திரத்துக்கும், எழுத்துரிமைக்கும் விதை விதைத்த ஒரு உத்தம புருஷனை அந்த நாடு என்னமாக மறக்க முடியும்? ஆதலால்தான் அவ்வீரனின் இரத்தம் சிந்திய இடத்திலேயே இன்று அவனது உருவச்சிலை புகழ் வீசி நிற்கின்றது.

மகாத்மா காந்தி எழுதிய

நூல்கள்

	ரூ.	அ.	பை.
இல்லறமும் பிரும்மசரியமும்	0	6	0
மகா தியாகம்	0	4	0
அனாசக்தி யோகம்	0	4	0
ஹிந்து தர்மம்	0	2	0
கீதா போதனை	0	2	0
உத்தம வாழ்க்கை	0	2	0
ஆரோக்கிய வழி	0	4	0
நீதி தர்மம்	0	2	0
சத்திய சோதனை முதற் பாகம் ...	1	8	0
சத்திய சோதனை இரண்டாம் பாகம்	2	0	0

ஹரிஜன மலர்கள் (மகாத்மா ஹரிஜன விஷயமாக வெளியிட்ட அறிக்கைகளின் மொழி பெயர்ப்பு)

ஹரிஜன சேவை	0	0	6
ஹரிஜனத் தொண்டு	0	0	6
ஹரிஜனப் பணி	0	0	6
ஹரிஜன விமோசனம்	0	0	6

சுதந்திரச்சங்கு புத்தகசாலை
பைக்கிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, சென்னை.

மூளையைக் குறைக்கும் படிப்பு

"தற்காலப் பள்ளிக்கூடப் படிப்பு இளைஞர்கள் மூளையையெல்லாம் மழுங்கச் செய்துவிடுகிறது. உலகத்தில் என்ன நடக்கிறதென்று பார்க்காமல் கண்மூடி மௌனிகளாக மாணவர் ஆகிவிடுகின்றனர். இந்தியாவிலுள்ள காலேஜுகளும், ஸ்கூல்களும் சோம்பேறி மடங்களென்றே சொல்லலாம். சில மடங்களில் உலக விவகாரம் இன்னதென்று அறியாத பிக்ஷுக்களும், பிக்ஷுணிகளும் இருப்பதாகச் சொல்கிறார்களே, அப்படித்தானிருக்கிறார்கள் மாணவர்களும். மூளையிலுள்ள கதவுகளைத் திறந்து விடுங்களேன்! உலக வெளிச்சம் அந்த இருட்டுக் குகையில் கொஞ்சம் புகும்படி விடுங்களேன்" என்று பண்டித ஜவஹர்லால் கான்பூர் மாணவர்களிடையே பிரசங்கித்தார்.

ஏழைக்கு ஏழரைக் கோடி

ஜர்மனி தேசத்தில் இன்று அமுல் நடத்தும் ஹிட்லரைப் பற்றி என்ன வேண்டுமானாலும் சொல்லலாம். அவர் தேச பக்தியை மாத்திரம் யாரும் ஆட்சேபிக்க முடியாது. வேலை யற்ற ஏழைகளுக்குக் கஷ்ட நிவாரணம் செய்யப் பணம் வேண்டுமென்று அவர் சில தினங்களுக்கு முன்தான் சொன்னார். ஜனங்கள் தம்மிச்சையாக ஏழரைக் கோடி மார்க்குகளைக் கொண்டு வந்து கொட்டி விட்டார்களாம். 'ஏழைகளுக்கு நிதி' யென்று வாய் திறந்தால் இப்படியன்றோ பணம் சேரவேண்டும்? நமது ஹரிஜன நிதிக்கு இவ்வாறு, முணுமுணுப்புடன் துணை கொள்ளாத பணம், வந்து குவியுமா? குவிந்தால், நமது தேச பக்தியும் ஏழைகளிடம் உள்ள அன்பும் நிரூபணமாகு மன்றோ!

"உன் பாரம் உன் தலையிலே"

கட்டை வண்டியே! உன் தம்பி மோட்டார்க்கார் உன் "சுங்க வரிச் சுமை"யை வேறு ரூபத்தில் தாங்கி விட்டதாக, நீ சந்தோஷப் பட்டுக் கொண்டிருக்கிறா யல்லவா? அற்ப சந்தோஷம் வேண்டாம். மோட்டார் வாகனங்க ளல்லாத மற்ற எல்லா வண்டிகளுக்கும் மறுபடியும் சுங்கன் கேட்டுகள் வைப்பதற்காக, சென்னை சர்க்கார் ஜனவரி மாதத்தில் ஒரு மசோதாக் கொண்டுவரப் போகிறார்களாம். உன் பாரம் உன் தலையில்தான். அதைத் தாங்க ஆயத்தம் செய்து கொள்ளு.

ஆறில் ஒரு பங்கு

கவி சுப்பிரமணிய பாரதியார் எழுதிய சிறு கதை

[பூர்வ கதை;—கதாநாயகனுக்கு ராவ் பகதூர் சுந்தரராஜுலு நாயுடுவின் பெண் மீனும்பாளிடம் காதல். இவனுக்கு ஒருநாள் தன் காதலியிடமிருந்து கடிதம் வருகிறது. தன்னை மன்னுரு என்ற ஒருவனுக்கு மணம் செய்விக்கத் தந்தை முயன்றிருப்பதால், ஓர் பச்சிலையைத் தின்று ஆவியைத் துறக்கப்போவதாக, அவள் அதில் தெரிவிக்கிருள். அதைப் படித்த கதாநாயகன் உடனே துறவு பூண்டு வடதேச யாத்திரைக்குக் கிளம்பிவிடுகிருன். அப்படி சஞ்சாரம் செய்துகொண்டிருக்கையில், தீண்டா வகுப்பினரை உயர்த்தும் ஆசை உண்டாகிறது. "நாம சூத்திரர்" என்ற தீண்டா வகுப்பினருக்குச் சேவை புரியும் அசுவினி தத்தரைப்பற்றிக் கேள்விப்பட்டு, அவரைப் பார்க்க ஆசை கொள்ளுகிருன்.]

அத்தியாயம் 4.

கல்கத்தாவுக்கு வந்து சில தினங்களிருந்து விட்டு, பாரிஸாலுக்குப் போய்ச் சேர்ந்தேன். அங்கு போய் வழி விசாரணை செய்து கொண்டு அசுவினி குமாரதத்தருடைய வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தேன். வீட்டு வாயிலில் ஒரு வங்காளி பாபு நின்று கொண்டிருந்தார். அவரிடம் "அசுவினி பாபு இருக்கிறாரா?" என்று கேட்டேன். "இல்லை நேற்றுத்தான் புறப்பட்டுக் காசிக்குப் போயிருக்கிறார்" என்றார். "அடடா!" என்று சொல்லித் திகைத்து நின்றேன். காஷாய உடையைக் கண்ட அந்த பாபு உபசார மொழிகள் கூறி உள்ளே அழைத்துப் போய், தாக சாந்தி செய்வித்து விட்டு, 'யார்' 'எவ்விடம்' என்பதை யெல்லாம் விசாரணை செய்தார். நான் எனது விருத்தாந்தமெல்லாம் தெரிவித்து விட்டு, என் மனதிலிருந்த நோக்கத்தையும் சொன்னேன். "பாரும், பாபு, நம்மில் ஆறிலொரு பங்கு ஜனங்களை நாம் தீண்டாத ஜாதியாக வைத்திருப்போமானல் நமக்கு ஈசன் நல்ல கதி கொடுப்பாரா?" என்று என் வாயிலிருந்து வாக்கியம் கேட்டவுடனே அவர் முகத்தில் மிகுந்த வருத்தம் புலப்பட்டது. முகத்தைப் பார்த்தால் கண்ணீர் ததும்பி விடும்போலிருந்தது. தீண்டாத வகுப்பினரின் நிலையைக் கருதித்தான் இவ்வளவு பரிதாபமடைகிறார்போலுமென்று நான் நினைத்து "ஐயா, உம்முடைய நெஞ்சு போல் இன்னும் நூறு பேருடைய நெஞ்சிருக்குமானல் நமது நாடு செம்மைப் பட்டு விடும்" என்றேன்.

"ஸ்வாமீ, தாங்கள் நினைக்கிறபடி அத்தனை கருணையுடைய நெஞ்சம் எனக்கு இன்னும் மாதா அருள் புரியவில்லை. ஹீன ஜாதியாரைக் காக்க வேண்டுமென்ற விஷயத்தில் எனக்குக் கொஞ்சம் சிரத்தை யுண்டென்பது மெய்யே. அசுவினி பாபுவுடன் நானும் ஷெ வகுப்பினருக்கு நன்மை செய்வதில் சிறிது உழைத்திருக்கிறேன். ஆயினும் என் முகத்திலே தாங்கள் கவனித்த துக்கக் குறி நம்மில் ஆறிலொரு பங்கு ஜனங்கள் இப்படி அவலமாய் விட்டார்களே என்பதைக்கருதி ஏற்பட்டதன்று. தாங்கள் சொன்ன வாக்கியம் சில தினங்களுக்கு முன்பு இங்கு வந்திருந்த ஒரு *மந்த்ராஜி யம்மாளின் வாயிலிருந்து அடிக்கடி வெளிவரக் கேட்டிருககிறேன். தாம் அது சொன்னவுடனே எனக்கு அந்த அம்மாளின் நிலை ஞாபகம் வந்தது. அவளுடைய தற்கால ஸ்திதியை நினைத்து வருத்தமுண்டாயிற்று. அடடா! என்ன குணம்! என்ன வடிவம்! இவ்வளவு பாலியத்திலே நமது தேசத்தினிடம் என்ன அபரிமிதமான பக்தி!" என்று சொல்லித் திடுக்கென்று பேச்சை நிறுத்தி விட்டார். அப்பால் என் முகத்தை ஓரிரண்டு முறை நன்றாக உற்று நோக்கினார். (அவருடைய பெயர் ஸதீச சந்திர பாபு என்பதாக ஏற்கனவே சொல்லி யிருக்கிறார்.)

"ஸதீச பாபு, ஏன் இப்படிப் பார்க்கிறீர்?" என்று கேட்டேன்.

"ஸ்வாமிஜீ, க்ஷமித்துக் கொள்ள வேண்டும். நீங்கள் ஸந்யாஸி. எந்த தேசத்தில் பிறந்தவரென்பதைக் கூட நான் இன்னும் தெரிந்து கொள்ளவில்லை. ஆயினும் உங்கள் முகத்தைப் பார்க்கும் பொழுது எனக்கு அந்த யுவதியின் உருவம் கலந் திருப்பது போலத் தோன்றுகிறது. உங்களிருவருடைய முகமும் ஒன்றுபோலிருப்பதாக நான் சொல்லவில்லை. உங்கள் முகத்தில் எப்படியோ அவளுடைய சாயல் ஏறி யிருப்பது போலத்தோன்றுகிறது" என்றார்.

மதராஸ்ப் பக்கத்து யுவதி யென்று அவர் சொன்ன வுடனேயே என் மனதில் ஏதோ ஒரு விதமான பதைபதைப் புண்டாயிற்று.. அதன் பின்னிட்டு அவர் சொல்லிய வார்த்தைகளைக் கேட்டவுடன் அந்தப் பதை பதைப்பு மிகுதியுற்றது. [ஸந்யாஸி உடை தரித்திருந்தேன். நெடு நாளாகத் துறவையே ஆதரித்து வந்திருக்கிறேன். வேஷத்திலென்னடா இருக்கிறது, கோவிந்தா, வேஷத்தி லென்ன இருக்கிறது?]

"மீனும்பா?....அட, போ! மீனும்பா இறந்து போய் இரண்டு வருஷங்களுக்கு மேலாகிறதே?.......ஐயோ, எனது கண்மணி என்ன கஷ்டத்துடன் இறந்தாள்?"....என்பதாக, ஒரு க்ஷணத்திலே மனப் பேய் ஆயிரம் விதமாகக் கூத்தாடிற்று.

"ஸதீச பாபு, நானும் மதராஸ் பக்கத்திலே ஜனித்தவன்தான். நீர் சொல்லும் யுவதியைப் பற்றிக் கேட்கும் போது எனக்குத் தெரிந்த மற்றொரு பந்துவைப் பற்றி ஞாபகம் வருகிறது. நீர் சொல்லிய பெண் யார்? அவள் பெயரென்ன? அவள் இப்போது எங்கேயிருக்கிருள்? அவள் இங்கே என்ன நோக்கத்துடன் வந்திருந்தாள்? அவளுடைய தற்கால ஸ்திதியைக் குறித்து உமக்கு வருத்தமுண்டாவதேன்? அவளுக்கு இப்போது என்ன கஷ்டம் நேரிட்டிருக்கிறது? எனக்கு எல்லாவற்றையும் விவரமாகத் தெரிவிக்க வேண்டும்" என்றேன்.

கதையை விரிக்கத் தொடங்கினார் ஸதீச சந்திர பாபு. ஒவ்வொரு வாக்

* 'மந்திராஜீ யம்மா' என்பது மதராஸ் பிரதேசத்து ஸ்திரீ என்று பொருள் படும். மதராஸ் என்பதற்கு வட நாட்டார் மந்திராஜ் என்பார்கள்.

கியமும் என்னுள்ளத்திலே செந்தீ கனலும் இரும்புத் துண்டுகளை எறிவது போல விழுந்தது. அவர் சொல்லிய கதையினிடையே என்னுள்ளத்தில் நிழந்தன வற்றையெல்லாம் இடையிட்டுக் கொண்டு போனால் படிப்பவர்களுக்கு விரஸமாயிருக்குமென்றஞ்சி இங்கு அவர் சொல்லிய விஷயங்களை மட்டிலும் குறிப்பிடுகிறேன். என் மனத் ததும்புதல்களைப் படிப்பவர்கள் தாமே ஊகத்தாற் கண்டு கொள்ள வேண்டும். ஸதீச பாபு சொல்லலாயினர் :—

“அந்த யுவதிக்குத் * ‘தாஞ்சோர்.’ அவள் பெயர் எனக்குத் தெரியாது. நாங்களெல்லோரும் அவளை ‘தீன மாதா’ என்ற பெயர் சொல்லி யழைப்போம். அவளுடைய உண்மைப் பெயர் அசுவினி பாபுவுக்கு மாத்திரந்தான் தெரியும். ஆனால் அந்த தேவியின் சரித்திரத்தை எங்களுக்கு அசுவினி பாபு அடிக்கடி சொல்லியிருக்கிறார். அதை உம்மிடம் சொல்லுகிறேன் கேளும். அவள் ஒரு போலீஸ் பென்ஷன் உத்தியோகஸ்தருடைய குமாரியாம். அவளது அத்தை மகனாகிய ஒரு மங்த்ராஜ் நகரத்து வாலிபனுக்கு அவளை விவாகம் செய்து கொடுக்க வேண்டுமென்று தீர்மானம் செய்யப்பட்டிருந்ததாம். அவ்வாலிபன் ‘வந்தே மாதரம்’ கூட்டத்திலே சேர்ந்து விட்டான். அதிலிருந்து தகப்பன் அவளை வேறொரு போலீஸ் உத்தியோகஸ்தனுக்கு மணம் புரிவிக்க ஏற்பாடு செய்தான். கடைசித் தருணத்தில் அவள் கனவில் ஏதோ தெய்வத்தின் கட்டளை பெற்று ஒரு பச்சிலையைத் தின்றுவிடவே, அவளுக்குப் பயங்கரமான ஜ்வர நோய் கண்டு விவாகம் தடைப் பட்டுப் போய் விட்டது. அப்பால், தகப்பனாரும் இறந்து போய் விட்டார். இதனிடையே அவளுடைய காதலனாகிய மங்த்ராஜ் வாலிபன் என்ன காரணத்தாலோ அவள் இறந்து விட்டதாக எண்ணி ஸங்யாஸம் வாங்கிக் கொண்டு வெளியேறி விட்டானாம் —”

[ஏழை மனமே, வெடித்துப் போய் விடாதே. சற்றுப் பொறு” என்று என்னால் கூடியவரை அடக்கிப் பார்த்தேன். பொறுக்க முடியவில்லை.]

“ஐயோ, மீனா! மீனா!” என்று கூவினேன். பிறகு “ஸதீச பாபு. அவளுக்கு இப்போது என்ன கஷ்டம் நேரிட்டிருக்கிறது? சொல்லும். சொல்லும்” என்று நெரித்தேன்.

ஸதீச சந்திரருக்கு உளவு ஒருவாறு துலங்கி விட்டது. “இப்போது ஒன்றுமில்லை; சௌக்கியமாகத்தானிருக்கிறாள்” என்றார்.

“இல்லை யில்லை. என்னிடம் நீர் உண்மை பேச மயங்குகிறீர். நான் உண்மை தெரிந்தால் மிகத் துன்பப்படுவேனென்றெண்ணி நீர் மறைக்கிறீர். இதுவே என்னை நரக வேதனைக்குட்படுத்துகிறது. சொல்லி விடும். சொல்லி விடும்’ என்று வற்புறுத்தினேன்.

மறுபடியும் ஸதீச பாபு ஏதோ பொருளற்ற வார்த்தைகளைப் போட்டுக் குழப்பி, எனக்கு ஸமாதான வசனம் சொல்லத் தலைப்பட்டார்.

“பாரத தேவியின் ஹிருதயத்தின் மீதும், பகவத் கீதையின் மீதும் ஆணையிட்டிருக்கிறேன். என்னிடம் உண்மையை ஒளியாமல் சொல்லும்” என்றேன். இந்த ஸத்தியம் நவீன வங்காளத்தினரை எவ்வளவு தூரம் கட்டுப்படுத்துமென்பது எனக்குத் தெரியும். இங்ஙனம் நான் ஆணையிட்டதிலிருந்து, அவருக்குக் கொஞ்சம் கோபமுண்டாயிற்று.

“போமையா, மூட ஸங்யாசி. என்ன வார்த்தை சொல்லி விட்டீர்! இதோ உண்மை தெரிவிக்கிறேன்; கேட்டுக் கொள்ளும் அந்தப் பெண் இங்கு நாம சூத்திரர்களைப் பஞ்சத்திலிருந்து மீட்கப் பாடு பட்டதில், தீராத குளிர் ஜ்வரங்கண்டு, வைத்தியர்கள் சமீபத்தில் இறந்து விடுவாளென்று சொல்லி விட்டனர். அதற்கு மேல் அவள் காசியிற் போய் இறக்க விரும்பியது பற்றி அசுவினி பாபு அவளைக் காசிக்கு அழைத்துச் சென்றிருக்கிறார். உண்மை சொல்லி விட்டேன், போம்” என்றார்.

“காசிக்கா?”

“ஆம்.”

“காசியில் எங்கே?”

“அஸீ கட்டத்தில்.”

“அஸீ கட்டத்தில் எந்த இடம்?”

“அஸீக்குத் தெற்கே ‘நர்வா’ என்ற இடமிருக்கிறது. அதில் பல தோட்டங்களும், பங்களாக்களும் உண்டு. அதில் தைப்பூர் மஹாராஜா பங்களாவில் அசுவினி பாபு இறங்கி யிருக்கிறார்.”

“ரயில் செலவுக்குப் பணம் கொடும்” என்றேன். ஒரு பத்து ரூபாய் நோட்டை எடுத்து வீசி யெறிந்தார். மானத்தைக் கண்டதார்? மரியாதையைக் கண்டதார்? அங்கிருந்து அந்த க்ஷணமே வெளியேறி விட்டேன். வழியெல்லாம் தின்பதற்கு நெஞ்சத்தையும் அருந்துவதற்குக் கண்ணீரையுமே கொண்டவனாய்க் காசிக்குப் போய்ச் சேர்ந்தேன்.

(அடுத்த இதழில் கதை முடிவடையும்.)

* தஞ்சாவூர்.

ராம் மோஹனுடைய

வட இந்தியா யாத்ரா ஸ்பேஷல்

(பத்தாவது யாத்ரை)

1934-ம் வருஷம் பிப்ரவரிமீ முதல் வாரத்தில் சென்னையைவிட்டுப் புறப்படும்.

சரியான தேதி பின்னால் குறிக்கப்படும்.

கீழ்க்கண்ட இடங்களுக்குப் போகும்.

துங்கபத்ரை (மந்த்ராலயம்), பண்டராபுரம், பம்பாய் நாஸிக் (பஞ்சவடி த்ரயம்பகம்), பரோச், நர்மதை, பரோடா, அஹமதாபாத் (ஸபர்மதி), ஸித்தபூர் (மாத்ருகயா - ஸரஸ்வதி), அபு (மவுண்ட் அபு), அஜ்மீர் (புஷ்கரம்), ஜயபூர், ஆக்ரா, மதுரா (பிருந்தாவனம், கோகுலம், கோவர்தனம்), டெல்லி குருக்ஷேத்திரம், ஹரித்வார், (ரிஷிகேஸ), லக்னோ (லக்ஷ்மணபுரம்), அயோத்யா (நந்திக்ராமம்), பிரயாகை (த்ருவேணி), அலஹாபாத், ஸ்ரீகாசி, கயா, கல்கத்தா, பூரி (ஜகந்நாதம்), ஸிம்ஹாசலம், ராஜமஹேந்திரி (கோதாவரி), பெஜவாடா (கிருஷ்ணா).

மதராசுக்குத் திரும்பி வரும்.

சார்ஜ்கள்:—

மூன்றாவது வகுப்பு ரூ. 90

இரண்டாவது வகுப்பு ,, 225

மற்ற விபரங்களுக்கு எழுதவும்.

ராம் மோஹன் கம்பெனி,

21, சேகண்டு லேன் பீச்சு, மதராஸ்.

பிரதாப விகடன்

ஒரு மாதாந்திர விகடப் பத்திரிகை. மாதிரி பிரதி அணா இரண்டு. வருடச் சந்தா ரூபாய் ஒன்று. நியூஸ் ஏஜெண்டுகளிடமும் ஹிக்கின்போத்தாம்ஸ் ரயில்வே புத்தகசாலைகளிலும் கிடைக்கும். ஏஜென்ஸி விபரங்களுக்கு

மானேஜர்,

தபால் பெட்டி 23, ஜி. டி. மதராஸ்.

யாத்ரா மார்க்கம்

வாலிபச் சாரணர் கடமை

ஜப்பல்பூரில் வாலிபச் சாரணர் உபசாரத்துக்குப் பதில் சொல்லுகையில் காந்திஜீ சொன்னதாவது :—

"உலக முழுவதும் அலைந்து திரிந்திருக்கிறேனல்லவா? அதனால், ஆயிரக் கணக்கான வாலிபச் சாரணர் பழக்கம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது. உண்மையான வாலிபச் சாரணர்களுக்கு, தீரம், தயாளம், மரியாதை, புத்திக் கூர்மை ஆகிய குணங்கள் நிறைந்திருக்கின்றன. வாலிபச் சாரணர் ஹரிஜனங்களுக்கும் தொண்டு புரிய வேண்டும் என்பது என் விருப்பம். இதில் கஷ்டங்கள் ஏராளமாகத்தா னிருக்கின்றன. ஆனல் பரிகாரமே யில்லாத கஷ்டம் ஒன்று கூட உலகத்தில் கிடையாது. புனிதமான ஒரு இயக்கத்தின் பெருமை என்ன தெரியுமா? அதை வழி மறித்துக் கிடக்கும் இடைஞ்சல்கள், இயக்கம் வளர வளர, தாமாகவே விலகி ஒடிவிடும். ஆண்டவனே வழியைத் துலக்குகிறார். அவரே நமது வழிகாட்டி; நாம் அவரது கருவிகளே."

சுந்தர மாண்ட்லாவில்

நர்மதா நதி மூன்று பக்கம் சூழ, அடர்ந்த பசிய வனங்கள் நிறைந்த சுந்தரமான பிரதேசம் மாண்டலா. இது தான் சரித்திரப் பிரசித்தமான புராதன மாஹிஷ்மதி நகரம். ஆதி சங்கரருக்கும் மண்டன மிசிரருக்கும் விவகாரம் வந்த பொழுது, கல்விச் செல்வியான சரஸ்வதி யென்னும் பெண்கள் திலகம் பாரபட்சம் காட்டாமல் தன் நேச நாயகன் மண்டன மிசிரருக்குவிரோதமாகவே தீர்ப்புக் கூறியது இந்த இடத்தில் தான். அர்த்தமற்ற சடங்குகள் பயனற்றவை என்று நிலைநாட்டி, இருளையும் அறியாமையையும் ஓட்டும் ஞானமென்ற அலையை எழுப்பிவிட்டு, ஹிந்து சமயம் புத்துயிரும் பூரண மகிமையும் பெற்றுப் பொலியுமாறு, சங்கரர் முதன் முதலாக ஜயக் கொடி நாட்டியது இந்த இடத்தில்தான். இங்கு ஐயனுக்கு உபசாரப் பத்திரம் படித்துக் கொடுத்தவர்கள் கூறியதாவது:—"அதே காட்சிதான் இன்று மறுபடியும் நடிக்கப்படுகிறது. பன்னிரண்டு நூற்றாண்டுகள் கழிந்துவிட்டன. அதற்குப் பிறகு இதோ நீங்கள் விஜயம் செய்திருக்கிறீர்கள். ஜன சமூகத்தாரில் ஒரு பகுதியாருக்கு நாங்கள் இழைத்துவரும் பாவங்களை உணரும்படி, எங்கள் மனத்தை விழிப்புறச் செய்வதற்கு நீங்கள் வந்திருக்கிறீர்கள்." இந்த உருக்கமான பத்திரத்துக்குக் காந்திஜீ பதிலளிக்கையில், "உலகத்தில் வேற்றுமைகள் உண்டு; ஆனல், உயர்வு தாழ்வோ தீண்டாமையோ கிடையாது. யானையும் எறும்பும் ரூபத்தில் வேறுபட்டவைதான். ஆனல் இரண்டும் தமது கண்களில் ஒன்றே என்று ஈசன் அருளியுள்ளார்" என்று சங்கரர் போல ஐயன் கூறினர்.

"பூஜ்ய மாகி விடு"

சரியான உழைப்பாளிகள் வேண்டுமென்றே காந்திஜீ திரும்பத் திரும்பச் சொல்லி வருகிறார். "கூடிய சீக்கிரம் தீண்டாமை மறைந்துபோகப் போகிறது. மகாஜனங்கள் சீர்திருத்தத்திற்குத் தயாராயிருக்கிறார்கள்" என்ற காந்திஜீ, "ஆனல், என்ன செய்வது? ஜனங்களுக்கு உதவி புரியப் போதிய சரியான ஊழியர்கள் கிடைக்கவில்லையே" என்று பெரு மூச்சுடன் சொன்னர். சமீபத்தில் காந்திஜீ ஒரு ஹரிஜன ஊழியருக்கு என்ன எழுதியிருக்கிறார், பாருங்கள். அவர் எழுதியிருப்பதாவது :—'ஒரு பொது ஜன ஊழியன் சொந்தக்கஷ்ட நஷ்டங்களைப் பாராட்டக்கூடாது. அவன் ஒரு 'பூஜ்ய' மாகிவிட வேண்டும். அவனுக்குப் பெருமையோ, அதிகாரமோ, அந்தஸ்தோ இருக்கக் கூடாது. சேவையால் கிடைக்கும் பெருமை, அதிகாரம், அந்தஸ்து இவற்றையே அவன் மதிக்க வேண்டும். இயக்கத்திற்கு நேரிடும் இடைஞ்சல்களைக்கண்டு அவன் கலங்கக் கூடாது. இயக்கம் அவன் கையிலா இருக்கிறது? சர்வ வல்லமையுள்ள ஆண்டவன் கையிலன்றோ இருக்கிறது. நீங்களும் நானும் அவன் கைக் கருவிகள். உங்களுக்கு நேர்ந்த அவமானத்தைக்கண்டு, நீங்கள் சந்தோஷமே அடைய வேண்டும்; திடமாயிருக்க வேண்டும்."

மத்திய மாகாண வசூல்

மகாத்மாவிடம் ஜனங்களுக்குள்ள அபரிமிதமான அன்பு மத்திய மாகாணத்தில் நன்ருக விளங்கிவிட்டது. எங்கு போனாலும் 40 ஆயிரம், 30 ஆயிரம் என்று பல்லாயிரக் கணக்கான ஜனங்கள் கூடினர்கள். மத்திய மாகாணத்தில் மகாத்மா 3,000 மைலுக்கு மேல் பிரயாணம் செய்தார்; 200 பெருங் கூட்டங்களிடையே பேசினர்; ஆயிரக் கணக்கான வரவேற்புப் பத்திரங்கள் பெற்றார். சுமார் 75,000 ரூபாய் வசூலாயிற்று.

ஸ்வதேசியை ஆதரியுங்கள்
கள்ளிக்கோட்டை விஜிடபில்சோப்ஓர்க்ஸில்
தயார் செய்த மேன்மையான வாசனையுள்ள
மலபார் { லிலிரோஸ் சோப் / சந்தன சோப் / லிம்டா சோப் (நீம்-வேப்) / டர்கிஷ்பாத் சோப்
இந்த டாய்லட் சோப்புகள் ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டியதவசியம். ஆரோக்கியத்திற்கும் தேக சவுக்கியத்திற்கும் இவையே முதன்மையானவை.
எமது முக்கியமான சலவை சோப்புகள் :—
மலபார் சோப் &
நீலம் (இண்டிகோ) சோப்
நெ. 101. குஜராத் சோப்
எல்லா விடங்களிலும் கிடைக்கும்.
Props : சேட் நாக்ஜீ புருஷோத்தம் & கோ.
(of Sun Brand Umbrella Fame)
247, சைனபஜார் ரோட், மதராஸ்.
(H. O, கள்ளிக்கோட்டை)



காந்தி பல்லிழந்த கதை

மகாத்மாவுடன் சிறிது காலத்திற்கு நெருங்கிப் பழகிய டாக்டர் ஜொஸய்யா ஓல்ட் பீல்ட் என்ற ஆங்கிலேயர், காந்திஜியைப் பற்றிச் சமீபத்தில் தாம் எழுதி வெளியிட்டுள்ள புத்தக மொன்றில் அவரது பல்லைப் பற்றிய ஒரு சம்பவத்தைக் குறித்துக் கீழ்க் கண்டவாறு எழுதியிருக்கிறார் :—

லண்டன் நகரில் ஒரு ஹோட்டல். தமது தென்னாப்பிரிக்கக் கமிட்டி சம்பந்தமாக காந்திஜி ரொம்ப மும்முரமாக வேலை செய்து கொண்டிருந்தார். அப்பொழுது நான் அவரைப் பார்ப்பதற்காகப் போனேன். நான் வந்திருக்கும் சமாச்சாரத்தைக் கேள்விப்பட்டு, காந்திஜி வெளியே வந்தார். “சென்ற சில நாட்களாக ஒரு பல் எனக்கு ரொம்பவும் பாதை கொடுக்கிறது. அதைச் சற்றுப் பிடுங்கி எறிந்துவிட்டுப் போய் விடுங்களேன், உங்களுக்குப் புண்ணியமுண்டு” என்றார்.

நான் அவரது வாயைப் பரீட்சித்ததில் உள் முகவாய்க் கட்டையில் ரணமேற்பட்டிருந்ததைக் கண்டேன். அதிகமாக வலித்துக் கொண்டிருந்த அந்தப் பல்லைப் பிடுங்குவதும் கஷ்டமாக விருந்தது. “எனக்கு நேர மில்லை. உடனே ஒரு பல் வைத்தியரிடம் போங்கள்” என்று நான் சொன்னேன்.

“எனக்கே நேர மிருக்கையில் உங்களுக்குத்தானா அவகாச மில்லாமல் போய்விட்டது! சற்றுத் தயவு செய்து இப்பொழுதே, இங்கேயே அதைப் பிடுங்கிப் போட்டு விட்டுப் போங்கள். எனது சிந்தனா சக்தியையே அது கெடுத்துவிடுகிறது. கொஞ்சம் கிருபை வையுங்கள்” என்றார் காந்திஜி.

இதற்குப் பிறகு என்னமாக மாட்டேனென்று சொல்ல முடியும்? ஆகவே உடனே வெளியே சென்று, பல்லைப் பிடுங்கும் ஆயுத மொன்றை ஒருவரிடமிருந்து கடன் வாங்கிக் கொண்டு வந்தேன். அப்பொழுது கமிட்டிக் கூட்டம் நடந்துகொண்டிருந்ததால், அவர் எல்லோரிடமும் ஒரு நிமிஷம் விடை கேட்டுக் கொண்டு வந்தார்.

அப்பா! என்ன அழுத்தம்! என்ன உறுதி! அவ்வளவு அழுத்தமான பல்லை நான் அதுவரையில் பிடுங்கினதேயில்லை. காந்திக்கு என்ன வலி வலித்திருக்குமென்பது எனக்குத் தெரியும். இருந்தாலும் அவர் ஒரு “உஸ்” கூடப் போடவில்லை; உடம்பைக் கொஞ்சமும் ஆட்டவும், அசைக்கவுமில்லை. என்ன பொறுமை! என்ன மனவுறுதி! தலை மயிரும், பல்லும் எவ்வளவுக் கெவ்வளவு உறுதியாக விருக்கின்றனவோ அவ்வளவுக் கவ்வளவு மனதும் உறுதியாக விருக்கும் என்று சொல்லப்படுவதன் உண்மையை அப்பொழுது நான் அறிந்தேன். சிறிது நேர மிருந்துவிட்டு, ஒன்றுமே நிகழவில்லை போல் எழுந்து, எனக்கு வந்தனமளித்துவிட்டு, அவர் மறுபடியும் கமிட்டிக் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

ஒரு ஒப்பந்தம்

இரண்டு செட்டியார்கள் ஒரு கூட்டுக் கடை வைத்தார்கள். அதற்கு எழுதிக்கொண்ட ஒப்பந்த முறியில் காணப்பட்ட ஷரா பின்வருமாறு :—

“கடை முறிந்துபோனால், லாபத்தை இருவரும் சரிசமானமாகவே பங்கிட்டுக்கொள்ளச் சம்மதிக்கிறோம்.”

விளம்பரம்

சங்கு நூல்கள் யாவும் அடியிற் கண்ட விலாஸத்தில் குறித்த விலைப்படி கிடைக்கும். (அவசியமானால் நூல்கள் பெயரையும் குறிப்பிடவும்.)

V. B. சாஸ்திரி,
சங்கு ஏஜெண்ட்,
244, பேயர் வீதி, ரங்கூன்.

குடிசைக் காட்சி

(மகாத்மா காந்தி)

1929-ம் ஆண்டில் நான் அனந்தபூரில் கண்ட குடிசைகள் தாழ்ந்த கூரை வேய்ந்தவையா யிருந்தன. சுவரோ மண்ணாலெடுத்தது. காற்றோட்டம் கிடையாது. பெட்டிகளோ, வெண்கலப் பித்தளைப் பாத்திரங்களோ அவற்றில் இல்லை. இந்தக் குடிசை வாசிகள் தாங்களே கதர் தயாரித்திருந்தால் உண்டு, இல்லாவிட்டால் கந்தைத் துணிகளே கட்டியிருந்தார்கள். குடிசைகளிலிருந்த ஒரே ஆஸ்தி, காலி மண்குதிர்கள் தான். அவை ஓராண்டுக்கு வேண்டிய தானியம் கொள்ளக்கூடியவையா யிருந்தன. சமைக்க, இருக்க, உட்கார எல்லாவற்றிற்கும் ஒரே அறைதான்.

கந்தை கலந்த வைக்கோற் படுக்கை. தாங்களாகக் கதர் நெய்து வைத்துக் கொண்டவர்கள் மாத்திரம் கதர்ப் படுக்கை வைத்திருந்தார்கள். ஜோவார், சப்பாத்தி இவைதான் அவர்களுடைய ஆகாரம். எண்ணை விட்டுத் தாளித்தோ தாளிக்காமலோ கொஞ்சம் பருப்பும் உண்டு. பாலையும் நெய்யையும் அவர்கள் கண்டதேயில்லை.

நான் பார்த்த ‘சாமார்’ வீடு மாத்திரம் இதற்கு ஒரு விலக்கு. அவரிடம் இரண்டு பசுக்களிருந்தன. ஆனால், அவரோ அவர் குழந்தைகளோ அவற்றினிடமிருந்து கரந்த பாலில் ஒரு சொட்டையாவது தாங்கள் பருகினதில்லை.

இந்தக் கிராம வாசிகள் உடுப்பதும் அற்பம்; உண்பதும் அற்பம். சில குழந்தைகள் வருஷ முழுவதும் அம்மணமா யிருக்கின்றன. வெயிலிலோ அன்றி இரவாயின் சுள்ளி பொறுக்கிக் குவித்தெரித்த தீயிலோதான் அவர்கள் குளிர் காய்கிறார்கள். இங்கே கதர்த்தொழிலைப் பல குடும்பங்கள் கைக்கொண்டுள்ளன. காலணா முதலை வைத்துக்கொண்டே பலர் கதரில் இறங்கினார்களாம். முதல்நாள் நூற்ற நூலை விற்றதில் மறுதினம் இருமடங்குகாசு கிடைத்தது. மெல்லமெல்ல விருத்தியடைந்து, இப்பொழுது அக்குடும்பங்கள் தங்கள் தங்களுக்கு வேண்டிய துணிகளைத் தாங்களே தயாரித்துக் கொள்ளுகிறார்கள்.

—ஹரிஜன்.

தமிழ் அன்பர்களே!

(ஸ்வாமி சுத்தானந்த பாரதியார் எழுதுகிறார்.)

பிரெஞ்சு லாரூஸ் அகராதியையும், Book of Knowledge போன்ற நூல்களையும், வங்கம் ஹிந்தியில் வர்ணப் படங்களுடன் வரும் நூல்களையும் ஒருபுறம் பார்த்து விட்டு, மற்றொரு புறம் தற்காலத் தமிழ் நிலையையும் பாருங்கள். அம்மொழிகளினும் உயர்ந்த கலைச்செல்வம் உள்ளது. ஆனால் அது கதிரிட்டுப் பரவவேண்டும். புதுப் புதுத் துறையிற் புகுந்து அவரவர் திறனுக் கேற்றவாறு தமிழர் தமிழை வளர்க்கவேண்டும். உலகில் எங்கு ஒரு அரிய நூல் எழுதப் பெற்றாலும் ஹிந்தி உடனே அதைத் தனதாக்கிக் கொள்ளுகிறது. வங்கத்தில் ஒரு அரிய நூல் வெளி வந்தால் உடனே ஐரோப்பிய மொழிகளில் அது உலவுகிறது. ஒரு வங்காளி முதலில் தனது தாய் மொழிப் பத்திரிகையைப் படித்தே, மீதி நேரமிருந்தால் ஆங்கிலத்தைத் தொடுகிறான். எவ்வளவு ஆங்கிலப் புலமை வாய்ந்த வங்காளியும் தனது சகோதர வங்காளிக்குத் தாய் மொழியிலேயே கடிதம் எழுதுகிறான். அவனுடன் தாய் மொழியே பேசுகிறான். படித்த தமிழன் எடுத்ததும் "கமான் ஸார், நாம் போவோம்; இன்று வெதர் ப்ளெசண்டா யிருக்கிறது" என்று தானே பேசுகிறான். ஆங்கிலந்தெரிந்த தமிழரில் எத்தனை பேர் தமிழ்ப் பத்திரிகை படிப்பவர்கள்? "என்ன தமிழ், சார்! இங்கிலீஷ் delightful, happy, gay, joyous, pleasing என்று பலவகையாக இன்பம் வழங்குகிறதே. இதற்கெல்லாம் தமிழிற் சொற்களுண்டோ?" என்று ஒருவர் மூக்குக் கண்ணாடி பிதுங்க முறைத்துக் கேட்கிறார். அடுத்தவரும் தமிழ் சரியாகத் தெரியாததால் "ஆமா, சார், தமிழிலே என்ன இருக்கிறது? ஏதோ சில தமிழையாக்கள் குசுடு துபுறு என்று சத்தம் போடுகின்றனர். இந்த லட்சணத்திலே தனித் தமிழ் வேண்டுமோம்! a sheer shameful failure" என்கிறார். அன்பரே, இன்பமே தமிழர் வணங்கும் கடவுள். தமிழே இன்பம். அந்த இன்பம் ஆங்கிலத்திலுள்ளது போலவே, ஓகை, உவப்பு, மகிழ்வு, களிப்பு, இனிவு, கனிவு எனப் பல வகைப்படும் என்று பளிச்சென்று விடை கூற ஒருவரிந்தால் இத்தகைய வாய்கள் நீளா. மேலும் தமிழில் மேனாட்டு இயற்கையறிவு நூல்களை எழுத முடியாதென்று ஆங்கிலத் தமிழர் கூறுகின்றனர். அந்த முயற்சி வெற்றியுற முடிந்து பொருநூல் பொருட் சேர்வு நூல் செடி நூல், உடல் நூல், தரைநூல்கள் தமிழில் எழுதப்பட்டு உறங்குகின்றன. தக்கோரைப் போற்றத் தமிழர் கற்றுக் கொள்ள வேண்டும். ஒரு நற்றமிழர் ஒரு துறையில் நன்கு பாடுபட்டு வெற்றி பெற்றால் வங்காளி தன் மொழியானை அன்புடன் ஆதரிப்பது போலத் தமிழன் முன் வந்து பரந்த மனத்துடன் ஆதரிக்கவேண்டும். இஃதின்றிக் கூட்டங்கூடி மதிப்பாகப் பேசி ஒருநாட் கூத்துடன் கலைவதில் அதிகப் பயனில்லை. முதன்மையாக, தான், தனக்கு, தன் கொள்கை, தன்னினம் என்றன அறவே யொழிந்து தமிழ், தமிழர், தமிழ் முன்னேற்றம், தமிழகச் சீர்மை எவையெனக் கருதவேண்டும். தமிழர் இனி உறங்கக்கூடாது. இன்னும் இரண்டாண்டுகள் இந்நிலையிலேயே யிருந்தால் கால வெள்ளத்தின் முன் தமிழ்க் கொடி நிற்ற லரிதாகும். ஆழ்ந்த ஆராய்ச்சியுடன், பல மொழியினரிடம் நன்கு பழகியே இதைச் சொல்லுவது.

(1) பிறமொழி பெரிதெனத் தாய் மொழி வளர்க்காப் பேதமை யொழிக. பலமொழி பயில்க. ஆங்கிலம், ஹிந்தி, பிரெஞ்சி, வடமொழி, தெலுங்கு எல்லாம் அவரவர் ஆற்றலுக்கேற்றபடி பயில்க. ஆனால் அவற்றின் பயனைத் தமிழிற் கொண்டு சேர்த்துத் தமிழ்க் கலையை ஒப்பற்ற உலகளாவிய கலைச் செல்வமாக்கவேண்டும்.

(2) மற்ற நாடுகளை முன்னேற்ற வீர வாலிபர்கள் உள்ளனர். தமிழ் உலகில் தலை நிமிருமட்டும் தமிழர் தமிழுக்காகவே மூச்சுவிட வேண்டும். எதைச் செய்தாலும் தமிழ், தமிழர், தமிழகத்தின் முன்னேற்றத்திற்கே செய்தல் வேண்டும்; வாடி வற்றிக் குராவிச் சிறுமைப் பட்டுக் குன்றிக் குறுகிய தமிழ்த் தாயின் அகமும், முகமும் பூரிக்கு முன், உண்மைத் தமிழன் மன மயக்கத்தில் உறங்கலாமா?

(3) சாதி சமயம், விபூதி, நாமம், அக்கம், துளவம், வடகலை, தென்கலை என்ற புறவேற்றுமைகளைப் பாராட்டி எப்போதும் வாயால் குப்பை கக்கிக் கொண்டு, போட்டி பொறாமையால் ஒருவருக் கொருவர் பேனாச் சண்டை புரிந்துகொண்டு தமிழன்னையின் முகத்தில் மை பூசாமல், பொதுநிலை யுணர்வுற்றுத் தமிழர் பொதுப்பணி போற்றி வாழவேண்டும். "இவன் பார்த்தால் நான் சாப்பிடமாட்டேன்; அவன் தொட்டால் தீட்டு; உவன் கிட்ட வந்தால் ஒதுங்கிப் போவேன்" என்று எவனும் பேசலாகாது. உலகம் இறைவனாலயம்; உயிர்கள் நடமாடுங் கோயில்கள். உயிர்கள் இறைவன் திருமேனி என்றவுணர்வு ஒவ்வொருவர் உள்ளத்தும் பதியவேண்டும்.

(4) சிவாத்துவிதம் உலகுயிரொற்றுமைக்குச் சிறந்த வழி காட்டுகிறது. உள்ளம் யாருக்கும் உள்ளது. அதுவே சிதம்பரம். அதில் ஆண்டவன் நடம் புரிகிறான். அவனை அங்கே அனைவரும் சிந்தித்தால் நாளாக நாளாக இன்பக் கனல் பிறக்கும்; உள்ளேயுள்ள கடவுள் உணர்வாகும்; அருள் பிறக்கும்; அருளால் அறிவு மலரும். அந்த ஒன்றை, உள்ளப் பொருளை, அனைவரும் அன்பால் சிந்தனை மலர் தூவி வணங்குக; பிறகு வேறு புற வேற்றுமைகளெல்லாம் அற்பத்தனமாகத் தோன்றும். தினம் ஒரு மணிநேரம் தியானம் போதும். எல்லாரும் இன்புற்றிருக்க நினைமின்; எங்கும் இறைவன், என் உள்ளே யிறைவன் எனக் கருதுமின்!

(5) தமிழரிடை ஒரு ஆற்றலுள்ளது. தமிழகம் தவ நிலயம். தமிழர் ஒன்றுபட்டெழுந்தால், உலகில் ஒரு அற்புதம் நிகழும். தமிழருக்குச் சிறப்பாக ஒரு அன்புக் காந்தமும், கடவுளுணர்வும், அருளறிவும் இயல்பாக இரத்தத்தில் ஊறிப்போயுள்ளன. அந்தத் தெய்வீக ஆற்றலைத் தமிழர் வளர்க்கவேண்டும்.

(6) பசிக்குத் தொழிலும், பரத்தில் நெஞ்சும், பரத்தைப் பாரில் பார்க்கும் விழியும் தமிழருக்கு வேண்டும். ஏதோ உண்டுறங்கிக் கணக்கை முடித்துச்

செல்லும் மனிதப் பூச்சியென உங்களை யெண்ணுதீர். ஏதோ வொருவிதமாக ஆடியோயும் பாவைக் கூத்தென உடல் வாழ்வை யெண்ணுது, தமிழன் உயர்ந்த நோக்கமும், பெரிய காரியத் திறனும், சக்திக் கனலும், கடவுளறிவும் பெற வேண்டும்; ஒவ்வொரு நொடியும் நம்முள் இலகும் கடவுளை விளக்கவேண்டும்.

(7) வாழ்வு அருமையாகக் கிடைத்த தவநிலம்; அதில் உண்மை யென்னும் விதையை விதைத்து, அன்பால் வளர்த்து, அறிவுக்கனி விளைத்து, உலகிற்கெல்லாம் இன்பமுற வளர்க்கவேண்டும். அந்த விதையே நாம் கடவுட் பங்கெனும் உணர்வு; அந்த அறிவே கடவுட் களிப்பு; அதுவே என்றுமுள்ள இன்பம். எல்லாரும் நன்று வாழ்க, ஒன்றி வாழ்க, இதயபன்றில் வாழ்க, மனமாய வேறுபாடுகளைத் தின்று வாழ்க!

(8) வாழ்வெல்லாம் யோகம்; கடவுள் நிலைபெறுவதே அந்த யோகத்தின் நோக்கம். உலகான்ம வாழ்வு, உலகளாவிய சுத்தயோக போகமாகப் பழுக்கும் காலம் வந்துகொண்டிருக்கிறது. அந்த யோக சக்தி தமிழ் நாட்டிலேயே வேரூன்றியுள்ளது. புதுயுகம் தமிழகத்திற் பொன்முகங் காட்டுகின்றது. தமிழர் புதுயுக வீர ராகுக.

(9) அடிப்படையான சீர்திருத்த வேலைக்கு முதலில் தூய தமிழ்த் தொண்டர், தமிழர் முன்னேற்றத்திற்குகந்த நாடகங்களை நடித்துப் பொது ஜனங்களுக்குப் புது உணர்வும் புது விழிப்பும் உண்டுபண்ண வேண்டும். நாடகக் கலையால் அற்புதமான சீர்திருத்தம் செய்யலாம்.

(10) பத்திரிகைகள் சிறந்த தொண்டுபுரிய முடியும். ஆனால் பத்திரிகை யுலகம் எவ்வளவோ திருந்த வேண்டும். ஒரு கல்யாண், ஸுதா, ஸரஸ்வதி, ப்ரபாசியையும் பார்த்துத் தமிழ்ப் பத்திரிகைகளையும் பார்த்தால் பரிதாபமா யிருக்கிறது. சிறந்த முறையில், தமிழுக்குச் சீரும் சிறப்பும், சுவையும் எழிலும், ஆற்றலும் திறனும் பிறக்குமாறு பத்திரிகைகள் புத்துணர்வுடன் மிளிரவேண்டும். அதில் தற்போது காணும் வசைகள் ஒழியவேண்டும். பொது மக்களுக்குப் பத்திரிகைகள் மிக உன்னத எண்ணங்களை யூட்டிப் பழக்கவேண்டும். நகைக்க வைப்பதினும் உணர வைப்பதே பத்திரிகைக்கு இயல்பாக வேண்டும்.

(11) அடுத்தது தமிழ் வளர்ச்சி நிலயங்கள். இவை தற்கால முற்கால முறையை யொட்டி நடக்கவேண்டும். பழமையே பேசிப் பயனில்லை. பழமை இனி மீளாது. புது முறையில் பயனுள்ள கல்வி பயிற்றவேண்டும். தமிழுடன் ஆங்கிலம், ஹிந்தி, ஆரியம் இந்நான்கும் போதமட்டும் தெரியவேண்டும். மொழி பயில்வதிலேயே போது போக்காது இயலறிவு நூல்களும், பல தொழில்களும் இயல்பிற் கேற்றவாறு பயிலவேண்டும். ஆங்கிலப் பட்டங்கள் பெற்று யந்திரங்கள் மாதிரி ஒரே போக்கில் அனைவரும் மந்தை மந்தையாக இடித்துச் செல்லாது ஒவ்வொருவரும் இயல்பிற்கேற்ற ஒரு துறையிற் புலமை பெறவேண்டும். புதுப்பொலிவும், பொதுநிலை யுணர்வும், காலத்திற்கேற்ற வீறும், திறனும் இன்றியே நமது குருகுலங்கள் வீழ்கின்றன.

(12) தமிழர் மாலை ஆறு மணிக்கும் காலை ஆறு மணிக்கும் வேறு சிந்தையற்று உள்ளத்தானைச் சிந்தித்து உலகுயிர்களுக்கெல்லாம் அன்பும் நலமும் உன்னவேண்டும். இந்த ஒற்றுமையெண்ணம் காந்த சக்தியுள்ளது. இதன் ஆற்றல் மிகப்பெரிது.

எந்தாய் வாழ்க!

இந்த ஆமணக்கு எண்ணெயைப் பக்கத்து டாக்டரே சிபார்சு செய்வார்.

—விளம்பரம்.

சிபார்சு செய்வார், சுவாமீ! அவர் குடிப்பாரா அல்லது உபத்திரவத்தை வாங்கிக் கொள்வாரா?

* *

திருடன் தடியை எடுத்து, சர்க்கார் வக்கீலை ஓங்கி அடித்தான். அதிருஷ்ட வசமாக அடியானது வக்கீலின் புஜத்தில் விழ்ந்தது.

—தினசரி.

இந்த அதிருஷ்டம் தேவலையா? துரதிர்ஷ்ட வசமாக அடியே கிடைக்காமலிருப்பது நல்லதா?

நமது மாதப் பத்திரிகையின் தனிப்பிரதி விலை அணு 5. மாதிரிப்பிரதி இனும்.

—விளம்பரம்.

"தனிப்பிரதி வேண்டாம். மாதிரிப் பிரதியை மாத்திரம் தயவுசெய்து தவருமல் மாதா மாதம் எனக்கு அனுப்பி வாருங்கள்" என்று ஒருவர் கேட்டுக் கொள்ளுகிறுர்.

* * *

பூரண ஆசையும், சகல சம்பத்துக்களும் இளந்தமிழ்ச் செல்வி........அம்மாளுக்கு இறைவன் என்று மளிக்குமாறு நாம் யாவரும் பிரார்த்திப்போமாக.

—ஓர் விமர்சனம்.

ஆயுசை, ஆசை என்ருக்கி அச்சுக் கோத்தவர் பெரிய வேதாந்தியா யிருக்க வேண்டுமென்றே?

* * *

"(உங்கள் கதா நாயகி) விளக்குமாற்றை வேறுவிதத்தில் பிரயோகம் செய்திருந்தால் நாடகம் முழுதும் பார்த்திருப்பேன்" என்று கூறினேன்.

—கட்டுரை.

அந்த சமயத்தில் தாம் அவள் அருகில் உட்கார்ந்திருக்கவும் ஆசைப்படாதது, கட்டுரையாளரின் அடக்கத்தையே காட்டுகிறதல்லவா?

* * *

நூதன சிறுவர் படப் போட்டி.

—பந்தய விளம்பரம்.

பழய சிறுவர் இதைக் கண்டு பெரிய கிளர்ச்சி செய்வதாகக் கேள்வி.

* * *

154,50,00,000 இந்தியத் தங்கம் வெளி நாடு சென்றது.

—தினசரி.

15,450 லக்ஷம் மூட்டைகளா? கஜங்களா? படிகளா? சேர்களா? அல்லது என்ன தான் பொறுமானம்?

* * *

"எனக்கு சர்க்கார் பதவியே வேண்டாம்."

—சர் சி. பி. ராமசாமி அய்யர்

சர்க்கார் உதவி மட்டும் அவ்வப்போதிருந்தால் போதும் என்பது சி. பி. யின் கருத்துப் போலும்.

* * *

"வாலிபர் வாழ்க்கையை ஸ்வர்க்க வாசத்திற்கே ஒப்பிடலாம்."

—பட்டமளிப்புப் பிரசங்கம்.

திரிசங்கு ஸ்வர்க்கந்தானே?

MAHATMA GANDHI

WILL OPEN

The Industrial School & Welfare Centre

AT KODAMBAKKAM

Date and time will be announced later.

Advisory Board:

C. Abdul Hakim, *President.*
Dr. P. Subbarayan, M.L.C.
Ramnath Goenka, Dubash.
Rao Bahadur L. C. Guruswamy, M.L.C.
Devsee Moolchand, Merchant.
Capt. V. D. Nimbkar, *Eye Surgeon.*

Working Committee:

Roopchand Pratap Mull, Banker.
R. V. Sastri, Editor, "Harijan," Treasurer.
S. Ganesan, Secretary and Agent.

Contributions will be welcomed and may be sent to the Secretary or Treasurer.

Office:—8, Pycrofts Road, Triplicane, Madras.

"Swathanthara Sangu"

A high class popular Tamil weekly.

Price one anna a copy.

Annual subscription:

Inland Rs. 4. **Foreign Rs. 6.**

ADVERTISEMENT TARIFF

	Per Insertion.
Advertisement rates per Page	Rs. 40 0 0
" Half Page	Rs. 20 0 0
" Quarter Page	Rs. 10 0 0
" per column inch	Rs. 1 8 0

One page is divided into 3 columns of $2\frac{1}{4}'' \times 9''$.

Cover Pages

2nd & 3rd cover page Rs. 50.
4th cover page Rs. 75.

For contracts of 3 months, 6 months and One year a discount of 5, 10 & 15% respectively will be given over these rates.

Office: 8-c, Pycrofts Road,
TRIPLICANE, MADRAS.

"சுதந்திரச் சங்கு"

ஒரு உயர்தரத் தமிழ் வாரப் பத்திரிகை.

தனிப் பிரதி விலை அணா 1.

வருடச் சந்தா:

உள்நாடு ரூ. 4. வெளிநாடு ரூ. 6.

விளம்பர விகிதங்கள்

ஒரு பக்கத்திற்கு தடவை ஒன்றுக்கு	ரூ. 40 0 0
அரைப் பக்கத்திற்கு " "	ரூ. 20 0 0
கால் பக்கத்திற்கு " "	ரூ. 10 0 0
ஒரு பத்தி ஒரு அங்குலத்துக்கு " "	ரூ. 1 8 0

ஒரு பக்கம் $2\frac{1}{4}'' \times 9''$ அளவுக்கு 3-பத்திகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

அட்டைப் பக்கங்கள்

2-வது, 3-வது பக்கங்களுக்கு ஒரு தடவைக்கு ரூ. 50.
4-வது பக்கத்துக்கு ஒரு தடவைக்கு ரூ. 75.

3-மாதம், 6-மாதம், ஒரு வருஷம் ஒப்பந்தங்களுக்கு, இந்த விகிதங்களிலிருந்து முறையே நூற்றுக்கு 5, 10, 15 வீதம் 'டிஸ்கவுண்ட்' தள்ளிக் கொடுக்கப்படும்.

மானேஜர்,
"சுதந்திரச் சங்கு",
8-C, பைக்ராப்ட்ஸ் ரோடு,
திருவல்லிக்கேணி, சென்னை.

"Swathanthara Sangu Press"

Invites enquiries of all classes of
General & Commercial Printing.

Printers of

"Harijan"

Conducted by Mahatma Gandhi

Published under the auspices of
The Servants of Untouchables Society.

Subscription for "Harijan"

Inland Rs. 4 Foreign Rs. 5-8.

8, PYCROFTS ROAD, TRIPLICANE, MADRAS.